விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 350 வள்ளுவர் ஆண்டு 2054 கார்த்திகை 18 திங்கட்கிழமை (04.12.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

## அலெக்ஸின் படுகொலைக்கு நீதி கோரி
# வட்டுக்கோட்டையில் கண்டன போராட்டம்
## பொலிஸாருக்கு எதிராக கோஷங்கள்



(வட்டுக்கோட்டை)
வட்டுக்கோட்டை பொலிஸாரின் சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு உயிரிழந்த நாகராசா அலெக்ஸுக்கு நீதி கேட்டு வட்டுக்கோட்டையில் நேற்று கண்டனப் போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.
(16ஆம் பக்கம் பார்க்க)

## யாழுக்கு அருகில்
# மிக்ஜாம் சூறாவளி

(யாழ்ப்பாணம்)
வடக்கு கடற்கரையில் யாழுக்கு அருகில் மிக்ஜாம் சூறாவளி நிலை கொண்டுள்ளது என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.
மேலும் இது வட 15


## மீசாலையில் கைக்குண்டு அடையாளம்

(சாவகச்சேரி)
சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மீசாலை மேற்குப் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை கைக்குண்டு ஒன்று அடையாளம் காணப்பட்டுள்ளது.
தனியார் காணி ஒன்றில் தென்னம் 15

## தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவி
## சிறீதரன், சுமந்திரன் வேட்புமனுத் தாக்கல்



(கொழும்பு)
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தலைமைப் பதவிக்காக போட்டியிடுவதற்கான வேட்புமனுக்களை பாராளுமன்ற உறுப்பினர்கள் சி.சிறீதரன், எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் தாக்கல் செய்துள்ளனர்.
இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் தேசிய மாநாடு எதிர்வரும் 2024 ஜனவரி மாதம் நடை 15



## யாழ்.காங்கேசன்துறையில்
## பெருமளவான இராணுவ கவச அங்கிகள் மீட்பு

(யாழ்ப்பாணம்)
கடந்த 33 வருடங்களுக்கு மேலாக இராணுவக் கட்டுப்பாட்டில் இருந்து அண்மையில் விடுவிக்கப்பட்ட காங்கேசன்துறை - மாங்கொல்லை பகுதியில் பெருமளவான இராணுவ அங்கிகள் (Flak jacket) கண்டெடுக்கப்பட்டுள்ளன.
விடுவிக்கப்பட்ட பகுதியில், காணி ஒன்றினை அதன் உரிமையாளர் 15

## டெங்கு நோயாளர்கள் நாட்டில் அதிகரிப்பு

(கொழும்பு)
நாட்டில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக டெங்கு கட்டுப்பாட்டு பிரிவு தெரிவித்துள்ளது.
கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்துள்ளதாக தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித துள்ளது.
கொழும்பு, நுகேகொட, மஹரகம, 15

## பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழர் தாயகத்தில் தொடரும் கைதுகள்
## அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர்கள் கவலை

(வோஷிங்டன்)
தமிழர்கள் அமைதியான முறையில் மேற்கொண்ட நினைவுகூரலிற்காக பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் இலங்கையின் வடக்கு-கிழக்கில் அவர்கள் கைது செய்யப்பட்டமை குறித்தும் தமிழ் மக்கள் நினைவுகூரலை முன்னெடுப்பதை தடுப்பதற்கு, குழப்புவதற்கு பொலிஸார் மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ள 15

## காசாவில் இஸ்ரேல் படை கொடூரத் தாக்குதல்
### 700 பாலஸ்தீனர்கள் 24 மணி நேரத்தில் பலி

(காசா)
காசாவின் பல்வேறு பகுதிகளில் இஸ்ரேல் நடத்திவரும் கொடூரமான தாக்குதல்களில் 24 மணிநேரத்தில் 700 பாலஸ்தீனர்கள் கொன்று குவிக்கப்பட்டுள்ளதாக பாலஸ்தீன சுகாதார அமைச்சு 15

### வடகொரியா மீது
## போர் தொடுப்பதை யாராலும் தடுக்க முடியாது ஜோ பைடன்



08ஆம் பக்கம் பார்க்க


## ஐ.எம்.எப்பின் 330 மில்லியன் டொலர்
## இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கும்

(கொழும்பு)
சர்வதேச நாணய நிதியத்தின் இரண்டாம் கட்ட கடன் தவணையான 330 மில்லியன் அமெரிக்க டொலர்கள் இரு வாரங்களுக்குள் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளதுடன், உலக வங்கியுடன் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ள இணக்கப்பாடுகளுக்கு அமைவாக, மேலும் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 200 மில்லி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
28 . 04 . 1947

மறைவு
04 . 12 . 2019

## அமரர் திருமதி கணபதிப்பிள்ளை கண்மணியம்மா

அம்மா!
ஈர் இரண்டு ஆண்டுகள்
அதற்குள் ஓடி விட்டனவோ?
அம்மா நீங்கள் வைத்த
ஈரப்பலா காய்த்து விட்டது
அதை உண்டு பார்க்க
நீ இங்கு வாராயோ?
தேம்பும் எமை ஆற்ற
நீ இங்கு வாராயோ?...
உங்கள் நீங்கா நினைவுடன்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நீர்வேலி தெற்கு,
நீர்வேலி. (18012) குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம்

கரவெட்டி கிழக்கு யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் வரணி மற்றும் கீரிப்பல்லி கரணவாயை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா பாலசுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (02.12.2023) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பாலசுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும் இராகவன் (அவுஸ்திரேலியா), இராமச்சந்திரன் (பிரித்தானியா), பாலநந்தினி, பாலச்சந்திரன், பாலராசன் (பிரித்தானியா), பாலநந்தன் (பிரித்தானியா), பாலாஜினி ஆகியோரின் அன்புத்தாயாரும் ரஞ்சிதமலர் (அவுஸ்திரேலியா), ரஞ்சினி (பிரித்தானியா), குணசீலன், பரமேஸ்வரி, ஜெயாலினி (பிரித்தானியா), பாமினி (பிரித்தானியா), அருட்செல்வம் (அருண் ரெக்ஸ், நெல்லியடி) ஆகியோரின் பாசமிகு மாமியாரும், கௌசிகன், அனங்கன் (அவுஸ்திரேலியா), ஜெரோம், ஜெசிக்கா, ஜோவான் (பிரித்தானியா), உஷாந்தன், சங்கீத், சஞ்சீ, அஜய், பவேஷ் (பிரித்தானியா) துஷானா, ஹரிஸ் (பிரித்தானியா), அக்ஷயா, அஸ்விதன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.12.2023) செவ்வாய்க் கிழமை காலை 9.00 மணியளவில் கீரிப்பல்லி, கரணவாயில் உள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக சோனப்பு இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
077 662 7944 (C-7794) குடும்பத்தினர்

# 5 நாட்களில் ரூ.11.5 இலட்சம் சாப்பாட்டுக்காக செலவு செய்த இராணுவம்

(கொழும்பு)

2022 ஆம் ஆண்டில் பாதுகாப்பு சேவை கட்டளை மற்றும் பணியாளர் கல்லூரிக்கு வந்த இராணுவத் தளபதிகள் குழு, உண்டு மகிழ்வதற்காக, ஐந்து நாட்களுக்கு கிட்டத்தட்ட பதினொரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாய் செலவிடப்பட்டது என தேசிய கணக்காய்வு அலுவலகம் வெளியிட்டுள்ள சமீபத்திய அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார நெருக்கடி காரணமாக செலவினங்களை கட்டுப்படுத்துவதற்காக திறைசேரி விடுத்துள்ள சுற்றறிக்கைக்கு முரணாக இந்தத் தொகை செலவிடப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தேசிய கணக்காய்வு அலுவலகத்தின் அறிக்கையின்படி, மேற்படி பணியாளர் கல்லூரியின் விவகாரங்களை ஆய்வு செய்ய வந்த பாதுகாப்பு செயலாளர், பாதுகாப்பு அதிகாரி மற்றும் முப்படை தளபதிகளுக்கே இவ்வாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

இதற்கிடையில், கல்லூரிக்கு 2019 முதல் 2022 வரை 13 கோடி ரூபாய்க்கு மேல் செலவில் கட்டப்பட்ட நான்கு அடுக்கு நூலகம் மற்றும் தேர்வுக் கூட கட்டிடத்தில் தண்ணீர் கசிவு பிரச்சினையை சரிசெய்ய முடியவில்லை என்று அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம-7)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
13 . 09 . 1938

இறப்பு
04 . 12 . 2022

## அமரர் அமரசிங்கம் நகுலாம்பிகை(பேபி அக்கா)

(ஓய்வுநிலை உப தபாலதிபர் - நீராவியடி)

எமக்கெல்லாம் அன்புத் தாயாய், அன்புச் சகோதரியாய் உற்ற துணையாய் எம்மோடு இருந்து நல்வழிப்படுத்தி அவையற்று முந்தியிருக்கச் செய்து எம் அனைவரையும் ஆறாத் துயரில் ஆழ்த்தி எமைவிட்டு பிரிந்த எங்கள் அன்புக்கு பாத்திரமான பேபி அன்ரியின் ஆன்மா எல்லாம் வல்ல ஈசன் அடியில் ஈடேற சாயி பகவானின் பாதார விந்தங்களை பணிந்து நிற்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

98,சட்டநாதர் வீதி, நல்லூர். (18096) அன்ரன் குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## திருமதி தர்மலிங்கம் மலர்

கொக்குவில் கிழக்கு வளாக வீதியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திருமதி தர்மலிங்கம் மலர் அவர்கள் கடந்த 01.12.2023 (வெள்ளிக்கிழமை) அன்று காலமாகிவிட்டார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை (05.12.2023) செவ்வாய்க் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக மதியம் 12.00 மணியளவில் கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

077 711 0645
077 221 6207 (18095)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடுத்த ஆண்டு இலங்கையர்களுக்கு நெருக்கடி மிக்க ஆண்டாகும்

## பேராசிரியர் அமிந்த மெத்சிலா

**(கொழும்பு)**

**இலங்கையில் அடுத்த வருடம்(2024) அத்தியாவசிய உணவுப் பொருட்கள் பலவற்றின் விலை 72 சதவீதம் உயரும் என பொருளாதாரம் மற்றும் புள்ளியியல் துறை பேராசிரியர் அமிந்த மெத்சிலா தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024ஆம் ஆண்டில் இலங்கையில் பொருட்களின் விலை மற்றும் சேவைகளின் கட்டணங்கள் உள்ளிட்டவை கணிசமான அளவில் அதிகரிக்கும். காரணம் மறைமுக வரிகள் மூலம் 72 சதவீதம் கூடுதல் வருவாயை அரசு எதிர்பார்ப்பதே ஆகும்.

அடுத்த ஆண்டு வரவு செலவுத் திட்ட ஆவணத்தின்படி 122,400 கோடி ரூபாய் (1224 பில்லியன்) கூடுதல் வருமானத்தை அரசு எதிர்பார்க்கிறது. அதில் 72 சதவீதம் வற் மற்றும் இதர கூடுதல் வரிகள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருட்கள் மற்றும் சேவைகளுக்கு வரி விதிக்கப்படும் போது, வணிகர்கள் வாடிக்கையாளரிடமிருந்து வரியை முழுமையாக வசூலிக்க முயற்சிப்பார்கள். அதன்படி, இந்த 72 சதவீத மறைமுக வரி நுகர்வோர் மீது செலுத்தப்படுவது தவிர்க்க முடியாதது.

அரிசி, மா, சர்க்கரை, பருப்பு, உருளைக்கிழங்கு, வெங்காயம் போன்ற அத்தியாவசிய உணவுப் பொருட்களின் விலை 72 சதவீதம் உயரும். பொது மக்களின் வாழ்க்கைத் தரம் குறைந்து பணவீக்கம் அதிகரிக்கும் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

## ஹந்தானயில் சிக்கியிருந்த 180 பேர் மீட்பு

(கொழும்பு)

ஹந்தான மலைத் தொடரில் சிக்கியிருந்த 180 மாணவர்கள் மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த மாணவர்கள் ராகம மருத்துவ பீட மாணவர்கள் என்றும் அவர்கள் மோசமான வானிலை காரணமாக நேற்று முன்தினம் அங்கு சிக்குண்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போதே அவர்கள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர். (நி-5)

## அதிகரிக்கும் பிளாஸ்ரிக் உற்பத்தி

(கொழும்பு)

இலங்கையில் நாளொன்றுக்கு சுமார் 938 மெற்றிக் தொன் பிளாஸ்ரிக் உற்பத்தி செய்யப்படுவதாக, சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான அபிவிருத்திக்கான துறைசார் மேற்பார்வைக் குழு தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் அஜித்மான்னப்பெரும தலைமையில் அண்மையில் பாராளுமன்றம் கூடிய போது இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பிளாஸ்ரிக்கில் 32 சதவீதம் மட்டுமே சேகரிக்கப்படுகிறது. சேகரிக்கப்பட்ட பிளாஸ்ரிக்கில் 4 சதவீதம் மட்டுமே இயந்திர ரீதியாக மறுசுழற்சி செய்யப்படுகிறது.


மிகுதியாகவுள்ளவை சேகரிக்கப்பட்டாலும், முறை சாரா முறையில் அப்புறப்படுத்தப்படும் சூழலே நிலவுகின்றது.

மேலும், தொழிற்துறையினருக்கு எந்தவித விதிமுறைகளும் இன்றி இரண்டாம் நிலை பிளாஸ்ரிக்கை இறக்குமதி செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்காலத்தில் தொழிற்துறையின் தேவைக்கேற்ப உரிமங்களை வழங்குமாறு மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு துறைசார் மேற்பார்வைக்குழு அறிவுறுத்தியுள்ளது. (நி-5)

# பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும்

## சித்தார்த்தன் பாராளுமன்றில் கோரிக்கை



(கொழும்பு)

பயங்கரவாத தடைச்சட்டத்தினை முழுமையாக நீக்க வேண்டும். கைதுகளையும் உடனடியாக நிறுத்த வேண்டும் என சித்தார்த்தன் பாராளுமன்றில் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் பிடிக்கப்பட்டவர்கள் விடுவிக்கப்படுகின்ற போது மீண்டும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் புதிதாக கைது செய்யப்படுகின்றார்கள்.

இறந்தவர்களை நினைவுகூருகின்ற நிகழ்வுகளில் அண்மையில் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள்.

தமிழ்க் கட்சிகளைப் பொறுத்த மட்டிலே பயங்கரவாத தடைச் சட்டத்தை இல்லாமல் செய்ய வேண்டும். நீங்களோ அதை மாற்ற வேண்டும், திருத்த வேண்டும் என்று கூறுகிறீர்கள்.

நீங்கள் இங்கிருந்து எதைச் சொன்னாலும் இந்த சட்டங்கள் இருக்கின்ற வரையும் அந்தப் பகுதிகளிலே வேலைசெய்கின்ற பொலிஸார் நிச்சயமாக பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைதுசெய்து கொண்டுதான் இருப்பார்கள். அவர்களை பிணையில்லாமல் சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கின்றார்கள்.


ஆகவே இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தை முழுமையாக இல்லாமல் செய்தால்தான் இந்த நிலைமைகள் இல்லாமல் போகும்.

கடந்த காலங்களில் கூட மிக சிறு சிறு விடயங்களுக்கெல்லாம் பல இளைஞர்கள் பயங்கரவாத தடைச் சட்டத்தின்கீழ் கைதுசெய்யப்பட்டு காலவரையின்றி சிறைகளில் இருந்தனர்.

தொடர்ந்து அவர்களை சிறையில் தடுத்து வைத்திருந்த காரணத்தினால் தான் இந்த போராட்டமானது மிகப் பெரிய ஆயுதப் போராட்டமாக உருவானது. இன்றும் கூட அது தொடர்ந்து நடந்து கொண்டுதான் இருக்கின்றதுஎன அவர்தெரிவித்தார். (நி-5)

# மரண அறிவித்தல்

தோற்றம் 29 . 07 . 1936



மறைவு 30 . 11 . 2023

## திருமதி. நாகலிங்கம் பரமேஸ்வரி

வட்டுக்கோட்டை மூளாய் றோட்டைப் பிறப்பிடமாகவும் தாவடி வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.நாகலிங்கம் பரமேஸ்வரி 30.11.2023 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் நாகம்மா தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்ற நாகலிங்கத்தின்(வர்த்தகர்-டாலை இரத்தினபுரி) பாசமிகு மனைவியும், பரமானந்தம், காலஞ்சென்ற சந்திரா மற்றும் ராதா ரட்ணா, நிர்மலா (கனடா), அனுஷியா (ஜேர்மனி), ரவிகரன் (லண்டன்), பிரபாகரன் (லண்டன்), ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற மகேஸ்வரியின் சகோதரியும் சூரியகுமாரி, பத்மநாதன், சிவபாதசுந்தரம், தில்லை நடராஜா (ஜேர்மனி), கலாதேவி (லண்டன்), ராஜேந்தினி (லண்டன்) காலஞ்சென்றவர்களான யோகலிங்கம், ரவிச்சந்திரன் ஆகியோரின் பாசமிகு மாமியாரும் பேரப்பிள்ளைகளின் பேர்த்தியும் பூட்டப் பிள்ளைகளின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 04.12.2023 திங்கட்கிழமை பி.ப 2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தாவடி வடக்கு,
கொக்குவில்.

(18084)

தகவல்
குடும்பத்தினர்
077 869 5084

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




# இந்திய வீரரே எனது முன்மாதிரி

இந்திய அணியின் நட்சத்திர பட்ஸ்மேன் விராட் கோலியை தனது மக னுக்கு முன்மாதிரியாக பயன் படுத்துவேன் என்று வெஸ்ட் இண்டீஸ் அணியின் ஜாம்ப வான் லாரா தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் கூறியதாவது, எனக்கு ஒரு மகன் இருக்கிறான். அவன் ஏதேனும் விளை யாட்டில் விளை யாட வேண்டும் என்று ஆசைப்பட்டால், விராட்கோலி மாதிரி விளையாட வேண்டும் என்று கூறுவேன். வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக பிரைன் லாரா டெஸ்ட் போட்டிகளில் ஒரு இன்னிங்ஸில் அதிகபட்சமாக 400 ரன்கள் அடித்தவர் என்ற சாதனையை படைத்துள்ளார்.

அத்துடன் மொத்தமாக வெஸ்ட் இண்டீஸ் அணிக்காக டெஸ்ட் போட் டிகளில் 11,953 ரன்களும் ஒருநாள் போட்டியில் 10,405 ரன் களும் அடித்துள்ளார்.




பிரைன் லாரா ஐ.பி. எல் தொட ரில்சன் ரைசர்ஸ் அணியின் பட்டிங் மற்றும் உத் திகளை வடிவமை க்கும் பயிற்சியா ளர் என்ற பொறுப் பில் இருக்கி றார். (நி-5)

# ஓய்வை அறிவித்தார் ஷேன்டவ்ரிச்

மேற்கிந்திய தீவுகள் அணியின் விக்கெட் காப்பாளரான ஷேன்டவ்ரிச், சர்வதேச கிரிக் கெட்டில் இருந்து உடனடியாக ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார்.

32 வயதான ஷேன் டவ்ரிச், எதிர்வரும் இங்கி லாந்துக் கிரிக்கெட் அணிக் கெதிரான ஒருநாள் தொடரில், தேர்வு செய்யப்பட்டிருந்த நிலையில் இந்த ஒய்வு அறிவிப்பை வெளியிட்டுள்ளார். எனினும் டவ்ரிச் தற்போது விலகியதால் அணியில் மாற்று வீரர் பெயரிடப்படவில்லை.

கடந்த 2015 ஆம் ஆண்டு அவுஸ்திரேலியா அணிக் கெதிரான டெஸ்ட் போட்டியில் அறிமுகமான டவ்ரிச், இதுவரை மொத்தம் 35 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளார்.



அவரது ஒரே ஒரு நாள் போட்டியில் 2019 ஆம் ஆண்டு பங் களாதேஷ் அணி க்காக விளை யாடினார்.

அவர் அணி க்காக அவர் கடை சியாக 2020 டிசெ ம்பரில் நியூஸிலாந்துக்கு எதிராக விளையாடினார். (நி-5)

# மொஹமட் ஷமிக்கு வாய்ப்புகள் குறைவு

இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மொஹமட் ஷமி ஒருநாள் சர்வதேச மற்றும் இருபது-20 கிரிக்கெட் போட்டிகளில் விளையாடுவதற்கு வாய்ப்புகள் குறைவாக காணப்படுவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

காலில் ஏற்பட்டுள்ள உபாதை காரணமாக அவருக்கு நீண்டகால ஓய்வு தேவைப்படுவதாக குறிப் பிடப்படுகிறது.

இந்த நிலையில், அவர் தொடர் ந்தும் டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாடுவ தற்காக ஒரு நாள் சர்வ தேச மற்றும் இருபது-20 போட்டிகளில் பங் கு கொள்வதை தவிப்பார் என அந்த தகவல் கள் தெரி விக்கின் றன. (நி-5)




# ஐ.பி.எல் ஏலம் முன்னேறிய மத்தியூஸ்

2024 ஆம் ஆண்டு இந்தியன் பிரீமியர் லீக் ஏலத்தில் இலங்கை வீரர்களான ஏஞ்சலோ மத்தியூஸ் முதல் வரிசைக்கு முன்னேறியுள்ளதுடன் வனிந்து ஹஸரங்க இரண்டாம் வரிசையைப் பிடித்துள்ளார்.

முதல் வரிசை வீரர்களின் ஆரம்ப ஏலத்தொகை 2 கோடி இந்திய ரூபாய்களாக காணப்படும். அதேவேளை இரண்டாம் வரிசை வீரர்களின் ஆரம்ப ஏலத்தொகை யாக 1.5 கோடி இந்திய ரூபாய்கள் காணப்படுகின்றது.

இலங்கை வீரர்களில் ஏஞ்சலோ மத்தியூஸ் மட்டுமே முதல் வரிசை ஏலத்தில் இடம் பிடித்துள்ளார்.

இந்தியன் பிரீமியர் லீக் போட்டிகளின் 2024 ஆம் ஆண்டுக்கான ஏலம் டிசெம் பர் 19 ஆம் திகதி துபாயில் நடைபெறவுள்ளமை குறிப் பிடத் தக் கது. (நி-5)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேள்வி அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி (வடக்கு மாகாணம்)

1. தலைவர், பிராந்திய பெறுகைக்குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, கிளிநொச்சி அவர்கள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனைக்கும் அதன் பிரிவுக்குட்பட்ட வைத்தியசாலைகளுக்கும் 2023/2024 ஆம் ஆண்டிற்கான வாகன சுத்திகரிப்பு சேவைக்கு இப்போது தகவுடையோரும் தகைமைபெற்றவருமான கேள்வியாளர்களிடம் இருந்து குறியீடு செய்யப்பட்ட விலைக்கேள்விகளைக் கோருகின்றார்.

| விடயம் | குறியீட்டு இலக்கம் | வாகனங்களின் எண்ணிக்கை | சேவைக் காலம் | மீளளிக்கப்படாத வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) | மீளளிக்கப்படும் வைப்புத் தொகைக்கான காலம் |
|---|---|---|---|---|---|---|
| வாகன சுத்திகரிப்பு சேவை | NP/KOC/RDHS/42/2/VS/2023/24 | 27 | ஒரு வருடம் | 2,500.00 | 50,000.00 | 18.02.2024 |

2. விலைக்கேள்வியானது தேசிய போட்டி கேள்வியின் (NCB)மூலம் நடாத்தப்படும்.
3. விலைக் கேள்விதாரர்கள் உரிய வகையிலான வியாபார பதிவுடையவராகவும், கறுப்புப் பட்டியலில் பெயர் இடம் பெறாதவராயிருத்தலும் வேண்டும்.
4. தகைமைகள் பற்றிய தேவைப்பாடுகள் கேள்வி ஆவணத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.
5. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்கள் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி, (தொலைபேசி இல 0212285932/ 0212225719) அவர்களிடமிருந்து மேலதிக தகவலைப்பெறலாம் என்பதுடன், இம் முகவரியில் காலை 09.00 மணியிலிருந்து பிற்பகல் 15.00 மணிவரை கேள்வி ஆவணங்களை பரிசோதனை செய்யலாம்.
6. அக்கறை கொண்டுள்ள கேள்வியாளர்களினால் ஆங்கில மொழியிலான கேள்வி ஆவணங்களின் பூரணமான தொகுதியொன்றை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றை சமர்ப்பித்து **05.12.2023 ஆம் திகதி முதல் 18.12.2023 ஆம்** திகதி வரை மு.ப 09.00 மணி தொடக்கம் பி.ப 15.00 மணிவரையான காலப்பகுதியில் மேலே அட்டவணையில் கூறப்பட்டுள்ள மீளளிக்கப்படாத தொகையினை கட்டணமாக செலுத்தி பெற்றுக்கொள்ளலாம்.
7. கேள்விகள் **18.12.2023 ஆம்** திகதியன்று முற்பகல் **10.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் தலைவர், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,A9 வீதி, கிளிநொச்சி எனும் முகவரியில் நேரடியாக நிதிக்கிளை பெறுகைப்பெட்டியினுள் இடுதல் வேண்டும். அல்லது பதிவுத்தபால் மூலமாகவோ இரு பிரதிகளில் ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட கேள்விகள் யாவும் நிராகரிக்கப்படும். கேள்விதாரர்கள் குறியீட்டு இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். நேரடியாக கீழேயுள்ள முகவரியில் வருகைதரவிரும்பும் கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது சமூகத்தில் முடிவுறுத்தல் காலத்தின் பின் உடனடியாக கேள்விகள் திறக்கப்படும்.
8. மேலே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு கேள்விப் பிணைப்பணம் (Bid Security) செலுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.
9. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று கிளிநொச்சி, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையில் 11 ஆம் திகதி டிசெம்பர் 2023, 10.30 மணிக்கு நடைபெறும்.
10. 01/11/2023 ஆம் திகதிக்குப்பின் அந்தந்தப் பிரதேச செயலாளர்களிடம் இருந்து பெறப்பட்ட தமது சொத்துக்களின் பெறும்தியை உறுதிப்படுத்தும் சான்றுக்கடிதமும் (பி.எஸ்.எம்.201, பொது 170 படிவம்) அத்துடன் வங்கி உத்தரவாதக்கடிதம் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
11. ஏற்கனவே சேவையினை வழங்கிவரும் ஒப்பந்தக்காரர்கள் எதிர்வரும் காலங்களுக்கு புதியவர்களாகவே கருதி தீர்மானம் எடுக்கப்படும்.
12. இவ் விலைமனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்து எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ்விலைமனுகோரலை இரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**தலைவர்,பிராந்திய பெறுகைக்குழு,**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை,கிளிநொச்சி.** (சி-7792)

# தேர்தல்களை இலக்கு வைத்து மஹிந்த-பஷில் மீண்டும் கூட்டு



(கொழும்பு)

பிளவுபட்டு செயற்படுவதனால் அரசியல் ரீதியில் படுமோசமான நிலை ஏற்படும்.

எனவே 2024ஆம் ஆண்டில் நடைபெறவுள்ள இரு தேசிய தேர்தல்களை வெற்றி கொள்வதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ள ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தேசிய அமைப்பாளர் பஷில்ராஜபக்ஷ, எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை இடம்பெறவுள்ளஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2ஆவது தேசிய சம்மேளனம் கட்சியின் அரசியல் வெற்றிப் பாதையின் முதல்க் கட்டம் என்றும் குறிப்பிட்டுள்ளனர்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 2 ஆவது தேசிய சம்மேளனத்தை எதிர்வரும் 15ஆம் திகதி சுகததாச உள்ளக அரங்கில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எதிர்கால அரசியல் திட்டம் மற்றும் நாட்டை அபிவிருத்திப் பாதையில் கொண்டு செல்வதற்கான திட்டம் என்பவற்றை சம்மேளனத்தின் போது வெளியிடப்படும் என்று பஷில் ராஜபக்ஷ இதன்போது தெரிவித்தார்.

ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தேர்தல் வரலாற்றில் பல்வேறு சாதனைகளை படைத்துள்ளது. இனி வரும் தேர்தல்களிலும் பெறும் வெற்றிகளை அடைவோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி-5)

# அதிகரிக்கும் போஞ்சி விலை

(கொழும்பு)

சந்தையில் போஞ்சி விலை சடுதியாக அதிகரித்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதற்கமைய, சந்தையில் போஞ்சி கிலோ ஒன்றின் விலை 950 முதல் 1000 ரூபாய் வரையிலஷ் விற்பனை செய்யப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு போஞ்சியின் விலை உயர்வுக்கு இடைத்தரகர்களே காரணம் என விவசாயிகள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

இடைத்தரகர்களின் இந்த செயற்பாடு குறித்து அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)

# இராசிபலன்

**04.12.2023**
**கார்த்திகை 18, திங்கட்கிழமை**
**சப்தமி முன்னிரவு 10.08மணிவரை**

**மகம் பின்னிரவு 1.09 மணிவரை**
**சுபநேரம் -12.15-01.45 மணிவரை**
**இராகுகாலம்-07.45-09.15 மணிவரை**
**ஆறுமுகநாவலர் குருபூசை**

**சந்திராஷ்டமம் - உத்தராடம் ,திருகோணம்.**

**வளவன்**




புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள்,பிள்ளைகளின் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும்.




குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், புதிய பொருட் சேர்க்கையுண்டு, செய்தொழிலில் எதிர்பார்த்த நற்பலன் கிடைக்கும்.




அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், எதிர்பாராத ஒருவர் உங்களுக்கு உதவ முன்வரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




சிலர் பாராட்டுவது போல உங்களை விமர்சிக்கலாம், வேலைகள் உடனுக்குடன் முடியாமல் தாமதமாகலாம், பயணங்களின் போது பொருட்களில் கவனம் தேவை.




பெற்றோர் நலனில் அக்கறை காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம்,வழிபாடு காரிய வெற்றி தரும், பயணங்களால் பலனுண்டு.




திட்டமிட்ட காரியங்களில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், நண்பர்கள் ஒளிவுமறைவின்றிப் பழகுவார்கள், அனுபவத்தின் வாயிலாக பல தகவல்களை அறிந்து கொள்வீர்கள்.




மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தொட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், தொழில் வளர்ச்சி கூடும் நாள், போசன சுகமுண்டு.




மதிநுட்பத்தால் மகத்தான காரியமொன்றைச் செய்து முடிப்பீர்கள், இனிய அனுபவங்கள் ஏற்படும் நாள், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




இழுபறியாக இருந்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, உள்ளொன்று வைத்து புறமொன்று பேசுபவர்களை இனங்கண்டு கொள்வீர்கள்.




காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், சயன சுகக் குறைவான நாள்.




குடும்பத்தினரிடையே ஏற்பட்ட மனஸ்தாபங்கள் விலகும், உதாசீனப்படுத்தியவர்கள் உதவிகேட்டு வரலாம்,வழிபாடு ஆனந்தம் தரும், பயணங்கள் கைகூடும்.




செயற்பாடுகளில் உற்சாகம் காட்டுவீர்கள், கொடுக்கல் -வாங்கல்கள் ஒழுங்காகும், உடல் நலனில் இருந்த பாதிப்புகள் அகலும், எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**வேதனைகளுக்கு மத்தியில்தான் விடியலும் உள்ளது.**

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




பளுதூக்கல் போட்டியிலே சாதனை படைத்த மாண வர்களினை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் பெரியகோமரசன்குளம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது வடமாகாண மற்றும் தேசிய ரீதியில் பளுதூக்கல் போட்டியில் பங்குபற்றி சாதனை செய்த பாடசாலை மாணவிகளிற்கு பதக்கம் அணிவித்து பரிசில்களும் வழங்கப்பட்டதுடன் பயிற்றுவிப்பாளர் ஞா.ஜீவன் மற்றும் பொறுப்பாசிரியர் அம்பிகா ஆகியோருக்கான கௌரவிப்பும் இடம்பெற்றிருந்தது.

பாடசாலை அதிபர் சி.வரதராஜா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா தெற்கு வலய உதவி கல்விப் பணிப்பாளர் கே.செந்தில் குமாரன், பெரியகோமரசன்குளம் பங்குத்தந்தை ஹெசான் அடிகளார், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர். (படம்- வசந்தரூபன்)

உகை நீரிழிவு தினத்தை முன்னிட்டு கைதடி யாழ். பல்கலை சித்த மருத்து அலகினரால் நேற்று முன்தினம் விழிப்பூட்டல் கருத்தரங்கும் பாரம்பரிய உணவுக் கண்காட்சியும் நடைபெற்றன.



# பருத்தித்துறை மருத்துவமனை முன் தேங்கி நிற்கும் வெள்ளம்

## பொதுமக்கள் அசௌகரியம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார மருத்துவமனை பிரதான வாயில் பகுதியில் வெள்ளநீர் தேங்கி நிற்பதனால் மருத்துவமனைக்குச் செல்லும் பொதுமக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

மருத்துவமனைக்கு முன்பாக உள்ள வீதியில் புனரமைப்புப் பணிகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன. குறித்த வீதி புனரமைப்புப் பணி முழுமை பெறாத நிலையில் வீதியின் தெற்குப் பக்கமாக பருத்தித்துறை ஆதார மருத்துவமனையின் பிரதான வாயில்கள் உள்ளிட்ட பகுதிகள் தாழ்வான நிலையில் காணப்படுகின்றன.

இதற்கு வடிகால்கள் எவையும் அமைக்கப்படவில்லை. இதன் காரணமாக தற்போது பெய்து வரும் மழை காரணமாக குறித்த தாழ்வான பகுதியில் வெள்ளநீர் தேங்கியுள்ளது. சம்பந்தப்பட்ட அதிகாரிகளை இதனை சீர் செய்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (நி-5-60)




பல்கலைக்கழக மாணவர்களின் ஏற்பாட்டில் பல்கலைக் கழகத்தில் நேற்று முன்தினம் இரத்ததான முகாம் நடைபெற்றது. இதன்போது மாணவர்கள், விரிவுரையாளர்கள், பல்கலைக்கழக ஊழியர்கள் என பலரும் இரத்ததான முகாமில் கலந்து கொண்டனர். (படம்-சிவசாந்தன்)

# தொழில் முனைவோருக்கு 2 வீத வட்டியில் கடன்

## இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர

(கொழும்பு)

இரண்டு வீத கடன் வட்டி நிவாரணத்தின் கீழ் தொழில் முனைவோருக்கு தேவையான மூலதனத்தை வழங்குவதாக சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியுடன் இணைந்து 30 பில்லியன் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 2.8 வீதமான தொழில் முயற்சியாளர்களை ஊக்குவிக்கும் பணி அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் 2028 ஆம் ஆண்டிற்குள் தொழில் முனைவோர் எண்ணிக்கையை 10 வீதமாக உயர்த்துவதே இதன் இலக்கென அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-5)


# மரண அறிவித்தல்

அமரர். **முருகேசு சுப்பிரமணியம்** (கராஜ்-வைரமுத்து)

**(அம்பிகை மோட்டோர் வேர்க்ஸ் உரிமையாளர்)**

தோற்றம்-30.07.1936

மறைவு- 02.12.2023



நவிண்டில் சக்கலாவத்தை கரணவாய் வடக்கைப் பிறப்பிடமாகவும், வதிரி கோட்டைத் தெருவை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு சுப்பிரமணியம் அவர்கள் நேற்று முன்தினம் (02.12.2023) சனிக்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு சின்னாச்சி தம்பதியரின் அன்பு மகனும், கதிர்காமு தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும் மற்றும் காலம் சென்றவரான பாக்கியலட்சுமியின் அன்புக் கணவரும், பாலாம்பிகை, யசோதாம்பிகை(ஜேர்மனி), சுபாம்பிகை,யோகாம்பிகை(டென்மார்க்), சிவராமன்(ஜேர்மனி), செந்தில்வேல்(அவுஸ்திரேலியா),ஜனாதனா(அபிவிருத்தி உத்தியோகத்தர், பிரதேச செயலகம், பருத்தித்துறை)ஆகியோரின் பாசமிகு தந்தையும்,காலஞ்சென்றவர்களான பொன்னம்பலம் (கந்தவனம்), கந்தையா (சதாசிவம்), செல்லம்மா, திருநாவுக்கரசு(கதிரவேல்) ஆகியோரின் இளைய சகோதரரும், தங்கம்மா, வள்ளிப்பிள்ளை, பொன்னையா, அன்னம்மா ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஜெயபாலு(உரிமையாளர்,ஜெயா ரெக்ஸ் நெல்லியடி), கீர்த்தன் (ஜேர்மனி), சண்முகலிங்கம்(டென்மார்க்), மணிமேகலை(ஜேர்மனி), சசிந்தினி(அவுஸ்திரேலியா), தணிகைவேள்(ஆசிரியர்/நெல்லியடி மத்திய கல்லூரி),ஆகியோரின் அன்பு மாமனாரும் பாரத் அஞ்சனா, உமைசுதன் பர்ஷா, கிருஷாயினி (அமரர்), டல்ஷிகா, நிகாஷன் , சாரங்கா, ஜோதிகா, தேனுகா, அருண், லக்சனா, பிரவின், டீபிகா, சமுத்திரா, துர்க்கா, பைரவி, தேஷ்னா, ரோகித் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (04.12.2023) திங்கட்கிழமை முற்பகல் 8 மணியளவில் அன்னாரின்இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் 077 124 0087
குடும்பத்தினர். (சி-7793) 077 988 2160


# பில் கேட்ஸ்- ரணில் விசேட சந்திப்பு




(துபாய்)

உலகின் பெரும் செல்வந்தர்களில் ஒரு வரான அமெரிக்காவின் பில் கேட்ஸ் மற்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு இடையிலான சந்திப்பு ஒன்று நடைபெற்றுள்ளது.

குறித்த சந்திப்பு துபாயில் உள்ள எக்ஸ்போ சிட்டியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடலின் போது இலங்கையின் விவசாய நவீன மயமாக்கல் மற்றும் உணவுப் பாதுகாப்பு குறித்து கலந்துரையாடப்பட்டுள்ளது. (நி-5)

# 2600 கிராம உத்தியோகத்தர்களை சேவையில் இணைக்க தீர்மானம்

(கொழும்பு)

புதிதாக 2600 கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்துள்ளார்.

இதற்கான பரீட்சை நேற்று முன்தினம் நடத்தப்பட்டது.

அதற்கமைய, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4ஆம் திகதிக்கு முன்னர் கிராம உத்தியோகத்தர்கள் சேவையில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளதாக இராஜாங்க அமைச்சர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.(நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த வருடத்தில் இதுவரை

## 8 லட்சம் பேருக்கு மின்துண்டிப்பு

(கொழும்பு)

**உரிய காலத்தில் மின் கட்டணத்தை செலுத்தாமை காரணமாக இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் நாடு முழுவதுமுள்ள 8 இலட்சம் வரையிலானவர்களின் மின் விநியோகம் துண்டிக்கப்பட்டுள்ளதாக மின்சாரசபைத் தகவல் கள் தெரிவிக்கின்றன.**

இதற்கு மேலதிகமாக, உரிய காலத்தில் மின் கட்டணத்தை செலுத்தாமை காரணமாக நாடு முழுவதும் மேலும் 12 இலட்சம் வரையிலான குடும்பங்களுக்கு சிவப்பு எச்சரிக்கை பட்டியல் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிய முடிகிறது.

மின் கட்டணம் இந்த வருடத்தில் இரு முறைகள் அதிகரிக்கப்பட்டமை தொடர்பில் அநேகமானவர்களின் மின் கட்டணம் பலமடங்கு அதிகரித்தது.

அவர்களின் பொருளாதார நிலைமைக்கமையவே மின் கட்டணத்தை செலுத்த முடியாமல் போயுள்ளது என பொருளாதார நிபுணர்கள் தெரிவிக்கிறார்கள். (நி-5)

# கடந்த ஆண்டு மட்டும் 433 யானைகள் உயிரிழப்பு



(கொழும்பு)

சுற்றுச்சூழல், இயற்கை வளங்கள் மற்றும் நிலையான வளர்ச்சிக்கான துறைசார் கண்காணிப்புக் குழுவின் கூற்றுப்படி, மனித - யானை மோதலால் கடந்த ஆண்டு 433 யானைகள் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

காட்டு யானை - மனித மோதலை தடுக்கும் வகையில் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வேலைத் திட்டத்தை உடனடியாக நடைமுறைப்படுத்துமாறு பாராளுமன்ற உறுப்பினர் அஜித் மான்னப்பெரும வேண்டுகோள் விடுத்துள்ளார். (நி-5)

# யாழ், கிளியை சேர்ந்த பெண்கள் கட்டுநாயக்கவில் கைது

(கொழும்பு)

போலி விசாவைப் பயன்படுத்தி இத்தாலிக்கு தப்பிச் செல்ல முயன்ற 2 பெண்கள் விமான நிலைய குடிவரவு எல்லைக் கட்டுப்பாட்டுப் பிரிவின் அதிகாரிகள் குழுவினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் கிளிநொச்சியைச் சேர்ந்த 31 வயதுடையவர் எனவும் மற்றையவர் யாழ்ப்பாணம் வல்வெட்டித் துறையைச் சேர்ந்த 26 வயதுடையவர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

விமானப் போக்குவரத்து அனுமதிக்காக அவர்கள் சமர்ப்பித்த ஆவணங்களில் சந்தேகம் அடைந்த கட்டார் ஏர்வேஸ் அதிகாரிகள் இருவரையும் விமான நிலைய குடிவரவு மற்றும் எல்லைக். கட்டுப்பாட்டு பிரிவு அதிகாரிகளிடம் அனுப்ப நடவடிக்கை எடுத்தனர்.

அங்கு நடத்தப்பட்ட விசாரணையில், அவர்களிடம் இருந்த இத்தாலிய விசாக்கள் போலியான தகவல்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டவை என்பது தெரியவந்தது.

அதற்கமைய, கைது செய்யப்பட்ட பெண்களிடம் மேலதிக விசாரணைகள் நடத்தப்பட்டு வருகின்றன. (நி-5)


## வலிகாமம் தெற்கு பிரதேச சபை 2024 ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் (வரைபு) பொதுமக்கள் பார்வைக்கு

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேசசபைகள் சட்டத்தின் 168 ஆம் பிரிவிற்கிணங்க வலிகாமம் தெற்கு பிரதேசசபையின் 2024 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத்திட்டம் தயாரிக்கப்பட்டு 04.12.2023 ஆம் திகதி தொடக்கம் 08.12.2023 ஆம் திகதி வரை பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. இதனை அலுவலக நேரத்தில் தலைமை அலுவலகம், சுன்னாகம், உடுவில், ஏழாலை உபஅலுவலகங்களிலும் பொது நூலகங்களிலும் மற்றும் அலுவலகத்தின் வலிகாமம் தெற்கு பிரதேசசபை முகநூல் பக்கத்திலும் பார்வையிடலாம் என்பதனை தயவுடன் அறியத்தருகிறேன்.

**திருமதி.சாரதா உருத்திரசம்பவன்,**
**செயலாளர்,**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**

(C-7780)



## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

### (தேசிய பாடசாலை)

### க.பொ.த உ/த 2025 இற்கான 80 இலட்சங்கள் பெறுமதியான புலமைப்பரிசில் திட்டங்கள்

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஐக்கிய இராச்சியம் பழைய மாணவர் சங்கமும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 1987 க.பொ.த உ/த பிரிவு பழைய மாணவர்களும் இணைந்து வழங்கும் இவ் புலமைப்பரிசில் திட்டங்களுக்கு தற்போது க.பொ.த சா/த பெறுபேறு கிடைக்கப் பெற்ற மாணவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.**

### புலமைப்பரிசில் வகைகள்

**வகை 01**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி பயிலாத வேறு பாடசாலை மாணவர்கள் **(வெளி மாவட்டம்)**

**அடிப்படைத் தகைமை**

க.பொ.த சா/த 2022 பரீட்சையில் 5A சித்திக்கு மேல் பெற்று (தற்போது பெறுபேறு கிடைக்கப்பெற்ற) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2025 க.பொ.த உ/த இல் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்.

**புலமைப்பரிசில் விபரம்**

விடுதி வசதி வழங்கப்படுவதுடன் அதற்கான 10,000/= மற்றும் கல்வி ஊக்குவிப்பிற்கான மாதாந்தம் 7000/= உதவிக்கொடுப்பனவுமாக மொத்தமாக 17,000/= மாதாந்தம் 24 மாதங்களுக்கு வழங்கப்படும்.

**நிதி - JCC UK OBA**

**வகை 02**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கல்வி பயிலாத வேறு பாடசாலை மாணவர்கள் **(யாழ்.மாவட்டம்)**

**அடிப்படைத் தகைமை**

க.பொ.த சா/த 2022 பரீட்சையில் 5A சித்திக்கு மேல் பெற்று (தற்போது பெறுபேறு கிடைக்கப்பெற்ற) யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் 2025 க.பொ.த உ/த இல் இணைந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்.

**புலமை பரிசில் விபரம்**

மாதாந்தம் கல்வி ஊக்குவிப்பு கொடுப்பனவாக 7000/= உதவிக் கொடுப்பனவு 24 மாதங்களிற்கு வழங்கப்படும்.

**நிதி - JCC UK OBA**

**வகை 03**

**அடிப்படைத் தகைமை.**

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் கற்று க.பொ.த சா/த பரீட்சையில் 5A சித்திக்கு மேல் பெற்று தொடர்ந்து க.பொ.த உ/த இனை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியிலேயே தொடர உள்ள மாணவர்கள்.

**புலமைப்பரிசில் விபரம்**

மாதாந்தம் 7000/= படி 24 மாதங்களிற்கு கல்வி ஊக்குவிப்பு உதவி கொடுப்பனவு வழங்கப்படும்.

**நிதி - 1987 க.பொ.த உ/த பிரிவு பழைய மாணவர்கள்.**
(பொன் விபுலானந்தன் புலமைப்பரிசில் திட்டம்)

மேற்படி புலமைப்பரிசில் திட்டத்தின் நோக்கம் க.பொ.த உ/த 2025 இல் மாணவர்களிற்கு கைகொடுத்து சிறந்த பெறுபேற்றிற்கு அவர்களை உயர்த்திவிடுதல்.

மொத்த புலமைப்பரிசில்களின் எண்ணிக்கை - 40

ஒவ்வொரு மாணவரிற்கும் தலா 200, 000 ரூபா பெறுமதியான புலமைப்பரிசில்கள் வழங்கப்படும்.

இப்புலமைப்பரிசில் தொடர்பான விபரங்களிற்கு தொடர்பு கொள்ள வேண்டியது.

**சி.இந்திரக்குமார், அதிபர், JCC**
**+94 0777 008412**
**க.விஜயசங்கர், தலைவர், OBA, UK**
**+44 7787 120858**
**க.கலாவண்ணன், OBA, UK**
**+44 7956 845225**

(C-7790)


**E-mail: jcentraloffice@gmail.com**

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பழைய மாணவர் சங்கம்**
**ஐக்கிய இராச்சியம்(UK)**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

### உலகின் மிக வயதான 'ஜோனாதன்' ஆமை



அட்லாண்டிக் பெருங்கடலின் தொலைதூர தீவான செயின்ட் ஹெலனா தீவில் பராமரிக்கப்பட்டு வரும் ஒரு ஆமை, உலகின் மிக வயதான ஆமை என்ற சிறப்பைப் பெற்றுள்ளது.

அந்த ஆமையின் பெயர் ஜோனாதன். கி.பி 1832ஆம் ஆண்டு பிறந்ததாக கணிக்கப்பட்டுள்ள இந்த ஆமையானது, 1882 இல் செசல்சில் இருந்து செயின்ட் ஹெலனா தீவுக்குக் கொண்டு வரப்பட்டது. வயதானாலும் சுறுசுறுப்புடன் வலம் வரும் ஜோனாதன், இந்த ஆண்டு 191 ஆவது பிறந்தநாளை கொண்டாடிக் கொண்டிருக்கிறது. இதுதொடர்பான வீடியோவை கின்னஸ் அமைப்பு வெளியிட்டுள்ளது. ஆமையின் வேகமும் சுறுசுறுப்பும் குறைவதற்கான அறிகுறி இல்லை என்று, அதற்கு சிகிச்சை அளித்து வரும் கால்நடை மருத்துவர் ஜோ ஹோலின்ஸ் தெரிவித்துள்ளார்.

"ஜோனாதன் ஆமை வாசனை உணர்வை இழந்துவிட்டது. கண்புரை நோயால் பாதிக்கப்பட்டு கிட்டத்தட்ட பார்வை மங்கிவிட்டது. எனினும், சாப்பிடுவதில் எந்த பிரச்சினையும் இல்லை. வாரத்திற்கு ஒருமுறை பழங்கள் மற்றும் காய்கறிகளை பராமரிப்புக் குழுவினர் ஊட்டுகின்றனர்" என்றும் மருத்துவர் குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# வடகொரியா மீது

# யாராலும் தடு

## அமெரிக்கா கடு



அமெரிக்க உளவு செயற்கைக் கோள்களின் நம்பகத்தன்மையை நீக்குவதன் மூலம் விண்வெளியில் எந்த அமெரிக்க தலையீட்டினையும் முடக்குவோம் என வடகொரியா பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்ட செய்தியை மேற்கோள் காட்டியே அமெரிக்க இந்தக் கருத்தை முன்வைத்துள்ளது.

**(வோஷிங்டன்)**

**வடகொரியா தனது செயற்கைக்கோள் நடவடிக்கை கருதுவதாகவும் அமெரிக்காவின் மூலோபாய சொத்து அதன் போர்த்தொடுப்பை யாராலும் தடுக்க முடியா ளது.**


"சட்டவிரோதமாக சமீபத்திய தொழில்நுட்பங்களை ஆயுதமாக்குவதன் மூலம் ஒரு இறையாண்மை அரசின் சட்டபூர்வ பிரதேசத்தை மீறுவதற்கு அமெரிக்கா முயற்சித்தால் அதனை அழிப்பதற்கான நடவடிக்கைகளை வடகொரியா பரிசீலிக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்நிலையில், வடகொரியா தனது முதல் இராணுவ உளவு செயற்கைக் கோளை நவம்பர் 21 ஆம் திகதி வெற்றிகர மாக விண்ணில் செலுத்தியது.

மேலும் இந்த செயற்கைகோளானது அமெரிக்காவின் பிரதான நிலப்பகுதி, ஜப்பான் குவாம் ஆகியவற்றில் உள்ள இராணுவ தளங்களின் புகைப்படங்களை பெற்றுள்ளதாகவும் தெரிவித்திருந்தது.

கடந்த இரு தினங்களுக்கு முன்னர்,

### இந்தோனேசியாவில் மண்சரிவு 12 பேர் மாயம்



(ஜகர்த்தா)

இந்தோனேசியாவில் தொடர்ச்சியாக பெய்துவரும் கனமழை காரணமாக ஏற்பட்ட மண்சரிவில் 12 பேர் காணாமல் போயுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. சுமத்ரா தீவில் பெய்த கனமழை காரணமாக மண், பாறைகள், மரங்கள் ஆகியவை உயரமான பகுதியிலிருந்து அடித்து வரப்பட்டு ஆற்றுக்குள் விழுந்ததால் அதன் கரை உடைந்து மலையடிவார கிராமங்களில் நிலச்சரிவு ஏற்பட்டதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதனால் பாதிக்கப்பட்ட பகுதியில் 12 பேரைக் காணவில்லை எனவும் அவர்களைத் தேடும் பணிகளில் தேசிய பேரிடர் மீட்புக் குழுவினர் ஈடுபட்டுள்ளனர். 12 வீடுகள், தேவாலயம், பாடசாலை ஆகியவை சேதமடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

அத்துடன் 50 குடும்பங்களைச் சேர்ந்தோர் இடம்பெயர்ந்து அரசின் தற்காலிக தங்குமிடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# 13 லட்சத்து 20 ஆயி

## இராணுவத்தில் இணைக்க

(மொஸ்கோ)


ரஷ்யாவில் போர் நடவடிக்கை தீவிரமாக நடைபெற்று வரும் நிலையில், 13 லட்சத்து 20 ஆயிரம் பேரை இராணுவத்தில் சேர்க்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

உக்ரைன், ரஷ்யா இடையிலான போர் நடவடிக்கையில் 2 லட்சத்திற்கும் அதிகமான வீரர்களை ரஷ்யா இழந்து இருப்பதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

இது போன்ற பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய இராணுவத்தில் கூடுதலாக 13 லட்சத்து 20 ஆயிரம் பேரை அணியில் சேர்க்க அரசு முடிவு செய்துள்ளது.

இந்நிலையில் ரஷ்ய ஜனாதிபதி புடின் ரஷ்ய இராணுவத்தில் கூடுதலாக 1 லட்சத்து 70 ஆயிரம் பேரை பணியில் சேர்ப்பதற்கான ஆவணத்தில் கையெழுத்திட்டு ள்ளார்.

இதனை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் மற்றும் கிரெம்ளின் உறுதிப்படுத்தியுள்ளது.




இது தொடர்பாக ரஷ்ய பாதுகாப்பு அமைச்சகம் வழங்கிய கருத்தில், உக்ரைன் மீதான சிறப்பு இராணுவ நடவடிக்கை மற்றும் நேட்டோ படைகளின் விரிவாக்கம் ஆகிய அச்சுறுத்தல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் தொடுப்பதை
# டுக்க முடியாது
## டும் எச்சரிக்கை

வடிக்கைகளில் தலையிடுவதைப் போர் அறிவிப்பாகக் சொத்துக்களுக்கு எதிராக ஏதேனும் தாக்குதல் நடந்தால் முடியாது எனவும் அமெரிக்கா எச்சரிக்கை விடுத்துள்



பேச்சுவார்த்தைக்கு அமெரிக்கா விடுத்த அழைப்பை வடகொரியா நிராகரித்திருந்தது.

இது குறித்து அந்நாட்டு ஜனாதிபதி கிம் ஜாங் உன்னின் சகோதரி கிம் யோ ஜாங் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஒரு சுதந்திர நாட்டின் இறையாண்மை என்பது பேச்சுவார்த்தையின் மூலம் சமரசம் செய்துகொள்ளக்கூடியது இல்லை. எனவே, அதற்காக அமெரிக்கா விடுக்கும் அழைப்பை ஒருபோதும் ஏற்க முடியாது."

சோவியத் யூனியனின் ஆதரவுடன் வடகொரியாவும் அமெரிக்க ஆதரவுடன் தென்கொரியாவும் நடத்திய கொரியப் போர் கடந்த 1953 இல் முடிவுக்கு வந்தது.

அதன் பிறகும் அமெரிக்கா-வடகொரியா இடையே பதற்றம் நீடித்து வருகிறது. எனினும் கடந்த 2018இல் அப்போதைய அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன்னும் 3 முறை நேரில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தார். இருப்பினும், இந்தப் பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# பிலிப்பைன்ஸில் குண்டு வெடிப்பு
## நால்வர் பலி



(மணிலா)


பிலிப்பைன்ஸின் தெற்குப் பகுதியில் கத்தோலிக்கப் பேராலயத்தில் ஏற்பட்ட வெடிவிபத்தில் 4 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும் 42 பேர் காயமடைந்துள்ளனர்.

நாட்டின் மிகப்பெரிய முஸ்லிம் நகரமான மராவியில் உள்ள மின்டானோ மாநில பல்கலைக்கழகத்தின் உடற்பயிற்சிக் கூடத்தில் நேற்றுக் காலை இச்சம்பவம் நிகழ்ந்துள்ளது.

ஜனாதிபதி பெர்டினாண்ட் மார்கோஸ் ஜூனியர் குண்டுவெடிப்பை "அறிவற்ற மற்றும் மிகவும் கொடூரமான" செயல் என்று கண்டனம் தெரிவித்துள்ளார்.

பொதுமக்களை அமைதியாக இருக்குமாறும் "உறுதியாக இருங்கள், இந்த இரக்கமற்ற செயலை செய்த குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்துவோம்." என்றும் அவர் கூறினார். (நி-5)

# யிரம் பேரை
## க ரஷ்யா முடிவு



அதிகரித்து வருவதால் இந்த ஆட்சேர்ப்பு முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சேர்க்கப்படும் வீரர்கள் ஒப்பந்த அடிப்படையில் படையில் சேர்க்கப்படுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

## வடகொரியாவிற்கு போட்டியாக
# உளவு செயற்கைக்கோளை ஏவிய தென்கொரியா

(சியோல்)

தென்கொரியா முதல் இராணுவ உளவு செயற்கைக்கோள் வெற்றிகரமாக விண்ணில் செலுத்தியுள்ளது.

வடகொரியா சமீபத்தில் இராணுவ உளவு செயற்கைக்கோளை விண்ணில் வெற்றிகரமாக ஏவி நிலைநிறுத்தியது. இதற்கு தென்கொரியா, அமெரிக்கா கடும் எதிர்ப்பு தெரிவித்தன.

இதற்கிடையே உளவு செயற்கைக்கோள் மூலம் அமெரிக்காவின் வெள்ளை மாளிகை, இராணுவ தலைமையகமான பென்டகன், கடற்படைத் தளம் ஆகியவற்றை படம் பிடித்ததாக வடகொரியா தெரிவித்தது.

இந்த நிலையில் தென்கொரியா தனது முதல் இராணுவ உளவு செயற் கைக்கோளை விண்ணில் ஏவியது. ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் பால்கன்-9 ரொக்கெட் மூலம் அமெரிக்காவின் கலிபோர்னியாவில்



உள்ள விண்வெளி படைத்தளத்தில் இருந்து செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது.

ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்துடன் தென்கொரியா செய்துள்ள ஒப்பந்தத்தில் 2025 ஆம் ஆண்டுக்குள் 5 உளவு செயற்கைக்கோள்களை விண்ணில் ஏவ முடிவு செய்யப்பட்டது. அதில் முதல் செயற்கைக் கோள் ஏவப்பட்டுள்ளது. வடகொரியாவுக்கு போட்டியாக தென் கொரியாவும் உளவு செயற்கைக் கோளை ஏவியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# வரகு




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name:- Paspalum Scrobiculatam**
**Family-Poaceae**
**English Name- Kodo Millet**
**Sinhala Name- Amu**

இச் செடி ஓராண்டுக்குரியது. தண்டு 60-90 செ.மீ நீளமானது. நிலக்கீழ்த் தண்டில் தண்டு இறுக்கமாகப் பிணைக்கப்பட்டிருக்கும். நிமிர்ந்து தண்டு வளரக்கூடியது. இலைகள் அடியிலிருந்து மேல்நோக்கி வளரும். இலைகள் நேராக அல்லது சற்றுச் சரிந்து வளரக்கூடியது.

15-20 செ.மீ நீளமானது. 2-8 மி.மீ அகலம் வரை செல்லும். நுனி கூரானது.



மென்மையான மயிர்கள் இலையின் மேல் காணப்படும் பூக்களின் கீழ் காணப்படும். பூந்துணர் தட்டையாகவும் மென்மையாகவும் காணப்படும். மேல் அடுக்கிலுள்ள பூந்துணர் வன்மையாகவும் கபில நிறமாகவும் பளபளப்பானதாகவும் நீள் வட்டமானதாகவும் மேலிருந்து பார்க்கும் போது பூக்களின் அடுக்கு உட்குழிவானதாகவும் காணப்படும்.

### பரம்பலும் இன விருத்தியும்

உலர் வலயத்தில் காலபோகத்தில் கிடைக்கும் மழைவீழ்ச்சி இப் பயிரின் உற்பத்திக்குப் போதுமானதாகும். நெடுந்தீவுப் பகுதியில் கூடுதலாகப் பயிரிடப் படுகிறது. விதைகள் மூலம் இன விருத்தி செய்யலாம்.

### 100 கிராம் வரகிலுள்ள சத்துக்கள்

ஈரலிப்பு-12.8 கிராம், சக்தி-309 கி.கலோரி, புரதம்-8.3 கிராம், கொழுப்பு-1.4 கிராம், காபோவைதரேற்று - 65.9 கிராம், கல்சியம்-27 மில்லி கிராம், பொஸ்பரஸ்-188 மில்லிகிராம், இரும்பு-5.2 மில்லி கிராம், தயமின்-330 மைக்ரோகிராம், றைபோபிளேவின்-90 மைக்கிரோகிராம், நியாசின்-2 மில்லிக்கிராம், நார்ப்பொருள்-9.0 கிராம்.

### மருத்துவப் பயன்கள்

இதன் நெல், உருண்டு ஒருவித கருநிற உமியால் மூடப்பட்டிருக்கும்.


### வரகு நெல்லிருந்து வரகு புழுங்கலரிசி தயாரிக்கும் முறை

வரகை நீர் விட்டு நெல் அவிப்பது போல அவித்து வெயிலில் நன்கு காய வைத்த அரைக்கும் ஆலையில் அரிசியாக்கி புடைத்து, கொழித்து அரிசியை வேறாக்கவும். நீரிழிவு நோயாளிகள், உடற் பருமன் அதிகரித்தவர்கள் வாரத்திற்கு இரு நாட்களாவது வரகு அரிசியைச் சோறாகச் சமைத்து உண்ணுதல் சிறந்தது.

### நீரிழிவு நோயாளிகளுக்குரிய வரகு சேர் இலைக்கஞ்சி தயாரித்தல்

வரகுப் பச்சரிசி -350 கிராம், முளைவிட்ட பயறு -60 கிராம், தேவையான இலை வகைகள்- தேவையான அளவு (சிறுகுறிஞ்சா, வல்லாரை, கொவ்வை, பொன்னாங்காணி) உப்பு- தேவையான அளவு, தண்ணீர்- 4 லீற்றர்.

பயறை முதல் நாள் தண்ணீரில் நன்கு கழுவி சிறிது நேரம் ஊற வைத்து வடித்து சுத்தமான வெள்ளைத்துணியில் கட்டி முளை வரவிட்டு பின்பு பயன்படுத்தவும். அரிசியைக் கழுவி தண்ணீரில் அவியவிட்டு அரிசி அரைப்பதத்திற்கு அவிந்த பின்னர் முளைப் பயிற்றை சேர்த்து அவிய விடவும். பின்னர் சிறுகச் சிறுக அரிந்த இலைகளில் இருந்து எடுத்த சாற்றை விட்டு உப்பையும் சேர்த்து இறக்கி பரிமாறலாம்.



### வரகரிசிமா தயாரித்தல்

. வரகு பச்சையரிசியை கழுவி உமி, கல், மண் அகற்றவும். வெயிலில் நன்கு காய வைத்து மாவாக்கவும். பின்பு அரித்து காற்றுப்படாமல் அடைத்து வைத்துக் கொள்ளவும். இவ் அரிசி மாவை நீரிழிவு நோயாளிகள், உடற்பருமன் அதிகரித்தவர்கள் இடியப்பம், ரொட்டி, தோசை, களி போன்றவற்றை தயாரித்து உணவாகப் பயன் படுத்தலாம்.

### நீரிழிவு நோயாளிகளுக்குரிய சத்துமா

வரகு பொரி அரிசிமா- 3 பங்கு, குத்தரிசி பொரி அரிசிமா-2 பங்கு, வறுத்த உழுத்தமா- 1 பங்கு, வறுத்த பயத்தமா-1 பங்கு, சீந்தில் மா-1/4 பங்கு.

மேலே கூறிய எல்லா மாக்களையும் ஒன்றாகச் சேர்த்து சுடுநீர் விட்டு சிறிதளவு வறுத்த தேங்காய்ப்பூ சேர்த்து குழைத்து உண்ணலாம். சாதாரணமாக நீரிழிவு நோயாளி தவிர்ந்தவர்களும் இதனைப் பயன் படுத்தலாம். அவர்கள் வறுத்த தேங்காய்ப்பூ, சீனி சேர்த்து சுடுநீரில் குழைத்து உண்ணலாம். இதனால் உடலைத் திடமாக வைத்திருக்கக் கூடியதாக இருக்கும்.

ஏதாவது நோயினால் பாதிக்கப்பட்டவர்கள் அச் சமயத்தில் எடுக்கக்கூடியதும் இலகுவாக சமிபாடடைந்து, அகத்துறிஞ்சப்படக்கூடியதுமாகும்.

### வரகரிசி உப்புக் கஞ்சி

வரகு புழுங்கல் அரிசி -50 கிராம், நீர்-4 டம்ளர், வெந்தயம்-1/4 தேக்கரண்டி, உள்ளி -3 பல்லு, உப்பு-தேவையான அளவு.

வரகுப்புழுங்கல் அரிசியை நன்றாகக் கழுவி உமி முதலியவற்றை நீக்கி நீரைக் கொதிக்க வைத்து வரகுப் புழுங்கல் அரிசியைச் சேர்த்து வேகவிடவும் அரிச அவிந்து வரும்போது வெந்தயம் , வெட்டிய உள்ளி ஆகியவற்றைச் சேர்த்து அவிய விடவும். இறக்கும் போது உப்பைச் சேர்க்கவும்.

எமது பிரதேச மக்கள் தானியங்கள், சிறுதானியங்கள் ஆகியவற்றை தமது உணவுப்பட்டியலில் சேர்த்துக் கொள்வதில்லை. பெரும்பாலான மக்களுக்கு தானியங்கள் பலவற்றை இனங் கண்டு கொள்வதும் சிரமமாக உள்ளது.

எமது ஆரோக்கியத்தை மேம்படுத்தக் கூடிய தானியங்கள், சிறு தானியங்கள் முதலியவற்றை எமது அன்றாட உணவில் சேர்த்துக் கொள்வதோடு மட்டுமன்றி இளைய சமுதாயம் அவற்றைப் பயன் படுத்தக்கூடிய வழிகாட்டாலையும் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

எமது மருத்துவத்தில் சில மருந்து தயாரிப்புக்களுக்கு வேண்டிய ஆற்றுத் தும்மட்டி, இலைக்கள்ளி, கொம்புக்கள்ளி போன்ற மூலிகைகளிலிருந்து சாறு எடுப்பதற்காக வரகு வைக்கோலை கொழுத்திய தீயில் மேற்கண்ட மூலிகைகளை வாட்டி சாறு எடுப்பது வழக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண பிரதேச செயலகம் நடத்திய சர்வ தேச மாற்றாற்றலுடையோர் தினமும் நூல் வெளியீட்டு நிகழ்விலும் பிரதேச செயலாளரின் வேண்டு கோளுக்கமைவாக 10 சக்கர நாற்காலிகள் லண் டன் ஈலிங் ஸ்ரீ கனகதுர்க்கை அம்மன் ஆலய அனுசரணையில் தமிழ்விருட்சத்தினால் வழங்கி வைக்கப்பட்டது. (படம்:-சதீஸ்)

# கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் கட்ட் காட்டுப்பகுதியில் சிறப்பு அதிரடி படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவரை சிறப்பு அதிரடிப்படையினர் சோதனையிட்டபொழுது அவர் ஒரு கிலோவும் 145 கிராம் எடை கொண்ட கஞ்சாவுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய் யப்பட்ட சந்தேக நபர் கிளி நொச்சி பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன் கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5-316)

கிளிநொச்சி கரைச்சிப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட புதுமுறிப்பு மீன்குஞ்சு உற்பத்தி நிலையத்திற்கு மேலும் 50000 மீன்குஞ்சுகளை விடும் நிகழ்வு நேற்று நடைபெற்றது.

(படம்:-தேவானந்தன், யதுபாஸ்கரன்)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 350 | 350 | 400 |
| உருளைக்கிழங்கு | 220 | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 1200 | 1200 | 1100 | 1100 |
| தக்காளி | 600 | 550 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 120 | 150 |
| கோவா | 350 | 400 | 380 | 500 |
| கரட் | 350 | 450 | 450 | 520 |
| பூசணி | 120 | 120 | 120 | 100 |
| புடோல் | 300 | 260 | 220 | 300 |
| வாழைக்காய் | 200 | 200 | 240 | 250 |
| சின்ன வெங்காயம் | 380 | 360 | 350-450 | 450 |
| பெரிய வெங்காயம் | 300 | 250 | 250 | 300 |
| பாகற்காய் | 650 | 500 | 500 | 700 |
| வெண்டக்காய் | 250 | 200 | 200 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 | 140 |
| பயற்றங்காய் | 500 | 600 | 400 | 500 |
| லீக்ஸ் | 350 | 280 | 350 | 400 |
| பீற்றூட் | 350 | 300 | - | 600 |
| கறிமிளகாய் | 700 | 800 | 750 | 600 |
| முருங்கைக்காய் | 800 | 1400 | - | 1800 |
| போஞ்சி | 500 | 500 | 600 | 600 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | 300 | 350 |
| கீரை – 1 பிடி | 150 | 120 | 120 | 160 |
| தேசிக்காய் | 1000 | 1200 | 800 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 90 | 100 | 80-90 | 70-100 |
| இராசவள்ளி | 450 | 500 | 500 | 500 |
| வெங்காயப்பூ | — | --- | — | — |
| முள்ளங்கி | 140 | 200 | --- | 320 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 80 | 60 |
| வல்லாரை | 50 | 30 | 50 | 50 |
| ஈரப்பலா | 200 | 150 | --- | 200 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2979

### சியான்

**புருசன் என்றால் என்ன அர்த்தம்?**

புரு + சன் = புருசன்
அதாவது...
சன் வருவதற்குள்...
எழுந்திருச்சு......
புரு காபி போட்டு...
பொண்டாட்டியை..
எழுப்புபவனே....
புருசன் எனப்படுவான்!

### ராகுல்




### வஸ்னா





### காயத்திரி




### சுரேஷ்




### சுலோஜனா




**நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 344





இருபத்திரெண்டாம்
அத்தியாயம்
சிறையில் சேந்தன் அமுதன்

தஞ்சைக் கோட்டைக்குள் பொற்காசுகள் வார்ப்படம் செய்யும் தங்கசாலை, மற்றொரு சிறிய கோட்டை போல அமைந்திருந்தது. தங்கசாலைக்கு வெளிப்புறத்தில் கட்டுக் காவல் தஞ்சைக் கோட்டை வாசலில் உள்ளது போலவே வெகு பலமாயிருந்தது. அன்று மாலை குந்தவை தேவியும் வானதியும் தங்க சாலையைப் பார்வையிடச் சென்ற போது வேலை முடிந்து பொற்கொல்லர்கள் வெளியில் புறப்படும் சமயம். வாசற் காவலர்கள் பொற்கொல்லர்களைப் பரிசோதித்து வெளியில் அனுப்ப ஆயத்தமானார்கள். பொற்கொல்லர்கள் வாசலண்டை வந்து குவிந்திருந்தார்கள். அந்த நேரத்தில் அரண்மனை ரதம் வந்து தங்கசாலையின் வாசலில் நின்றது. குந்தவையும் வானதியும் இறங்கினார்கள். அவர்களைப் பார்த்ததும் காவலர்களும் பொற்கொல்லர்களும் மெய்ம்மறந்து நின்று "வாழ்க இளைய பிராட்டி" என்று கோஷித்தார்கள். தங்கசாலையின் தலைவர் ஓடி வந்து அரசகுமாரிகளை ஆர்வத்துடன் வரவேற்றார். உள்ளே அழைத்துச் சென்று பொன்னைக் காய்ச்சும் அக்கினி குண்டம், நாணயவார்ப்படம் செய்யும் அச்சுக்கள், அச்சிட்ட நாணயங்கள் முதலியவற்றைக் காட்டினார். 'அன்றைய தினம் வார்ப்படமான தங்க நாணயங்கள் ஒரு பக்கத்தில் கும்பலாகக் கிடந்தன. அந்தப் பசும்பொன் நாணயங்களின் ஒளி கண்களைப் பறித்தது. ஒவ்வொரு நாணயத்திலும் ஒரு பக்கத்தில் புலியின் முத்திரையும் மற்றொரு பக்கம் கப்பல் முத்திரையும் பதித்திருந்தன.

"பார்த்தாயா, வானதி! எத்தனையோ காலமாக இந்தச் சோழ நாட்டுக்கு உலகமெங்குமிருந்து தங்கம் வந்து கொண்டிருந்தது. தரை வழியாகவும் வந்தது கப்பல் வழியாகவும் வந்தது. இதுவரை அவ்வளவு தங்கத்தையும் சுமக்கும் பொறுப்புச் சோழ நாட்டுப் பெண்குலத்துக்கே இருந்து வந்தது. ஆபரணங்களாகச் செய்து போட்டுக் கொண்டு தூக்கமுடியாமல் தூக்கி வந்தார்கள். கொஞ்சகாலமாகச் சோழ நாட்டுப் பெண்களுக்கு அந்தப் பாரம் குறைந்து வருகிறது. நம் தனாதிகாரி பழுவேட்டரையர் இம்மாதிரி கண்ணைப் பறிக்கும் தங்க நாணயங்களை வார்ப்படம் செய்ய ஏற்பாடு பண்ணிவிட்டார்!" என்று குந்தவை சொன்னாள்.

"அக்கா! இதனால் என்ன சௌகரியம்?" என்று வானதி கேட்டாள்.

"என்ன சௌகரியமா? நீ ஒன்றுமே தெரியாத பெண்ணடி! இம்மாதிரி பொன்னை நாணயங்களாகச் செய்துவிட்டால், 'இவ்வளவு பொன்' என்று நிறுத்துப் பாராமலே மதிப்பிடச் சௌகரியம். குடிகள் அரசாங்கத்துக்கு வரி கொடுக்கச் சௌகரியம். வர்த்தகர்கள் வெளிநாட்டாரோடு வியாபாரம் செய்வதில் பண்டத்துக்குப் பண்டம் மாற்றிக் கொண்டு கஷ்டப்பட வேண்டியதில்லை. பொன் நாணயங்களைக் கொடுத்துப் பொருள்களை வாங்கலாம் பொன் நாணயங்களைப் பெற்றுக் கொண்டு பண்டங்களை விற்கலாம். ஆகையினாலே தான் சோழ நாட்டு வர்த்தகர்கள் நம் தனாதிகாரி பழுவேட்டரையரை வாழ்த்துகிறார்கள் இன்னும் ஒன்று சொல்கிறேன். கேள்!" என்று கூறிக் குந்தவை தேவி குரலைத் தாழ்த்திக்கொண்டு சொன்னாள்:- "சக்கரவர்த்திக்கும், சக்கரவர்த்தியின் குடும்பத்துக்கும் எதிராகச் சதி செய்பவர்களுக்கு இந்த நாணயங்களினால் அதிக சௌகரியம். எப்படிப்பட்ட உத்தமர்களையும் இந்தப் பொற்காசுகளில் மூலம் துரோகிகள் ஆக்கி விடலாம் அல்லவா?" என்றாள்.

அருகில் நின்ற தங்கசாலைத் தலைமை அதிகாரியின் காதில் குந்தவை கடைசியில் கூறிய வார்த்தைகள் இலேசாக விழுந்தன. அந்த அதிகாரி, "ஆம் தாயே! அம்மாதிரி பயங்கரமான வதந்திகள் எல்லாம் இக் காலத்தில் கேள்விப்படுகிறோம்.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## வெயிலும் நிழலும்



அன்று சக்கரவர்த்தி அக்பர் ஏதோ காரணத்தால் காலையிலிருந்தே எரிச்சலுடன் இருந்தார். அவருடைய கோபத்தைத் தணிக்க விரும்பிய பீர்பல், "பிரபு! நீங்கள் இவ்வாறு இருப்பது சிறிதும் நன்றாகயில்லை. சிறிது சாந்தமாக இருக்கக்கூடாதா?" என்று பணிவாகக் கூறினார்.

"எப்போது சாந்தமாக இருக்க வேண்டும், எப்போது கோபமாக இருக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். நீ சொல்ல வேண்டிது இல்லை!" என்று அக்பர் பீர்பல் மீது எரிந்து விழுந்தார். "அதற்கு சொல்லவில்லை பிரபு! சிடுசிடுவென்று இருந்தால் இயற்கையில் அழகான உங்கள் முகம் விகாரமாக மாறிவிடுகிறது!

அதனால்" பீர்பலை இடைமறித்த அக்பர் "என்ன தைரியம் இருந்தால் என்னை சிடுமூஞ்சி என்றும் விகாரமானவன் என்றும் குறிப்பிடுவாய்? இனி, உன் முகத்தில் விழிக்க நான் விரும்பவில்லை! எங்காவது கண்காணாத இடத்திற்கு ஒழிந்து போ!" என்றார். இதைக் கேட்டு மனமுடைந்த பீர்பல் உடனே அந்த இடத்தை விட்டுச் சென்று விட்டார்.

அடுத்த நாள் அக்பர் தர்பாருக்கு வந்ததும் சபையில் பீர்பல் மட்டும் காணப்படாததை கவனித்த அக்பர் அவரைப்பற்றி விசாரித்தார். தர்பாரில் ஒருவர் எழுந்து நின்று, "பிரபு! நேற்று நீங்கள் அவர்மீது கோபமுற்று இந்த நகரத்தை விட்டுக் கண்காணாத இடத்திற்குச் சென்று விடுமாறு கட்டளையிட்டீர்களாம்!

அதனால் பீர்பல் தலைநகரை விட்டுச் சென்று விட்டார்!" என்றார். "அடடா! பீர்பல் உண்மையாகவே சென்று விட்டாரா?" என்று அக்பர் வருந்தினார். தான் அவ்வளவு கடுமையாகத் பேசியிருக்கக்கூடாது என்று உணர்ந்த அக்பர் தன் தவறுக்காக வருந்தினார்.

பீர்பலை மீண்டும் சந்திக்க வேண்டுமென்று அவர் மனம் அடித்துக் கொண்டது. ஆனால் பீர்பல் எங்கு சென்று விட்டார் என்று யாருக்கும் தெரியவில்லை. அன்று முழுவதும் பீர்பல் எங்கு சென்றிருக்கக்கூடும் என்பது பற்றியும், அவரை எவ்வாறு மீண்டும் திரும்பி வரவழைப்பது என்றும் தீவிர சிந்தனையில் ஆழ்ந்த அக்பருக்கு, இறுதியாக ஒரு யோசனை தோன்றியது.

உடனே அவர் மந்திரியை அழைத்து "மந்திரியாரே! கொளுத்தும் நடுப்பகல் வெயிலில் குடையின்றி ஒருவன் பிரதானசாலையில் நடந்து வர வேண்டும். அப்படி வருபவனுக்கு நூறு பொற்காசுகள் தரப்படும் என்று ராஜ்யமெங்கும் தண்டோராப் போடுங்கள்!" என்றார்.

"பிரபு! இப்போது கடுங்கோடை காலம்! குடையில்லாமல் அரை மணி நேரம் நடந்தாலும் நடப்பவன் சுருண்டு விழுந்து விடுவான். அப்படி இருக்க யார் தங்கள் உயிரை நூறு பொற்காசுக்காக விட முன்வருவார்கள்?" என்றார். "நான் சொல்வது போல் தண்டோராப் போட்டு அறிவியுங்கள்! போதும்!" என்றார் அக்பர்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> அநேகர் தங்கள் காலத்தில் பெரும்பாகத்தை பிறரை அவலத்திற்கு உள்ளாக்குவதிலேயே கழிக்கின்றனர்.
> – லா புரூயர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தமிழ் மக்களுக்கு ஈனமாகிய சமய வக்கிரப் போக்குகள்

தமிழ்த் தேசியம் என்ற கோசத்தை நிலைத்ததாக்குகின்ற ஏதுக்கள் ஏதேனும் உண்டா? என்றால் அதற்கான பதில் மௌனமாகவே இருக்கும்.

ஆம், தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கும்வரை தமிழ்த் தேசியம் என்பதே உயிர் மூச்சாக இருந்தது.

ஆனால் என்று அந்த அமைப்பு இல்லாமல் போனதோ அதன்பின்னர் தமிழ்த் தேசியம் என்பதை சமய பேதங்கள் குலைக்கலாயின.

இதை நாம் கூறும்போது தமிழ்த் தேசியம் என்பதனூடாக ஒன்றுபட்ட தமிழினம் எங்ஙனம் சமயப் பாகுபாட்டுக்குள் அகப்பட்டது.

விடுதலைப் புலிகள் இல்லாதவுடன் அப்படியானதொரு நிலைமை உடனடியாகவே ஏற்பட முடியுமா? என்று யாரேனும் கேட்கலாம்.

அவ்வாறு கேட்கின்றபோது, சமய வக்கிர உணர்வோடு இருந்தவர்கள் தமிழ்த் தேசிய நீரோட்டத்தில் அமைதி காத்தனர்.

ஆனால் விடுதலைப் புலிகள் அமைப்பு இல்லை என்றவுடன் அவர்கள் தங்கள் சுயரூபத்தைக் காட்டத் தலைப்பட்டனர்.

இதுவே உண்மை என்று வழிமொழிபவர்களும் இருப்பர்.

ஆம், 2009ஆம் ஆண்டு மே 18 யுத்தம் முற்றுப்பெற்றபோது 3 இலட்சம் தமிழ் மக்கள் முட்கம்பி வேலிக்குள் அடைக்கப்பட்டனர்.

எனினும் சில மதகுருமாருக்கு விசேடமாக விருந்தளித்த படையினர் அவர்களை ஆசுவாசப்படுத்தினர்.

மதகுருமாருக்கு முன்னுரிமை வழங்குவது சம்பிரதாயம்தானே என்று கூறப்படுமாயின், இன்னொரு சமயத்தின் அர்ச்சகர்கள் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் முட்கம்பி வேலிக்குள் முடக்கப்பட்டனர் என்ற குரல் ஒலிக்கவே செய்யும்.

இங்குதான் சமயப் பாகுபாடுகளை ஏற்படுத்தி அதனூடு தமிழ்த் தேசியத்தின் ஒற்றுமையைக் குலைக்க திட்டம் தீட்டப்பட்டதென்பது புரிதற்குரியது.

ஆம், அன்று இடப்பட்ட மதவாதத் தீ நம் தமிழ்த் தேசியத்துக்கு சிறு நெருப்பாய் தீயாய் மூளத் தலைப்பட்டுவிட்டது.

இதன் காரணமாக தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக எந்த முயற்சிகள் எடுக்கப்பட்டாலும் அதனை மதவாத நோக்குடன் விமர்சிக்கின்ற கயமைத்தனம் வந்துவிட்டது.

அண்மையில் தமிழ்ப் பிரதிநிதிகள் டில்லிக்குச் சென்று சில சந்திப்புக்களை மேற்கொண்டனர்.

எனினும் அதன் சாதகம் என்ன என்பதைக் கூட கிஞ்சித்தும் சிந்திக்காமல், அதனைக் கண்டபாட்டில் விமர்சிக்கின்ற அளவுக்கு நம் மத்தியில் மதவெறி ஏற்பட்டுவிட்டது.

இனி நம்மை அழிப்பதற்கு வெளியில் வேறு எவரும் தேவையில்லை என்றாயிற்று.

## புதிய விசா கொள்கையை இலங்கை அறிமுகப்படுத்தவுள்ளது

(கொழும்பு)

இலங்கை அரசாங்கம் புதிய விசா கொள்கையை அறிமுகப்படுத்தவுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள ஆணையாளர் ஜெனரல் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார்.

முதலீட்டு விசாக்கள், வெளிநாட்டு இணையவழி ஊழியர்களுக்கான டிஜிட்டல் குடியிருப்பு விசாக்கள், போர்ட் சிட்டி குடியிருப்பு விசாக்கள் மற்றும் இலங்கையர்களின் வெளிநாட்டு வாழ்க்கைத் துணைவர்களுக்கான நிரந்தர வதிவிட விசாக்கள் ஆகியவை புதிய விசா கொள்கையில் அடங்குகின்றன.

மற்றொரு பிரிவின் கீழ், வெளிநாட்டு மாணவர்கள் தங்கள் விசாக்களை ஆண்டுதோறும் புதுப்பிப்பதற்குப் பதிலாக ஒரு முறை 200 டொலர்களைச் செலுத்துவதன் மூலம், முழுப் படிப்பையும் நிறைவு செய்வதற்கான வசதி மேற்கொள்ளப்படும்.

டிஜிட்டல் பணிகளில் ஈடுபடும் வெளிநாட்டவர்கள், நாட்டில் இருக்கும் போது மாத வருமானம் 2,000 அமெரிக்க டொலர்கள் என்பதற்கான சான்றை வழங்குவதன் மூலம் ஒரு வருடத்திற்குள் டிஜிட்டல் விசாவை பெற முடியும்.

இதேவேளை கோல்டன் பெரடைஸ், கொண்டோமினியம், குடியிருப்பு விருந்தினர் திட்டம் மற்றும் மை ட்ரீம் ஆகிய விசாக்களின் கீழ் வரும் விசா வகைகளுக்குப் பதிலாக இன்வெஸ்ட்மென்ட் விசா எனப்படும் ஒரு வகை விசாவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக் குழுவின் வெளிநாட்டு ஊழியர்களுக்காக இந்த வதிவிட விசா திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## கடலாமை இறைச்சி நாவற்குழியில் மீட்பு
### சந்தேகத்தில் இருவர் கைது

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நாவற்குழிப் பகுதியில் உள்ள வீடொன்றில் இருந்து நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 21 கிலோ கடலாமை இறைச்சி மீட்கப்பட்டிருப்பதுடன் சந்தேக நபர்கள் இருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குருநகர் பகுதியில் பிடிபட்ட கடலாமைகள் இரண்டினை தென்மராட்சி - நாவற்குழிப் பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வைத்து இறைச்சியாக்கிய போதே சாவகச்சேரிப் பொலிஸார் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்துள்ளனர்.

இதன்போது கைதான சந்தேக நபர்கள் இருவரையும் நீதிமன்றில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகினறனர். (ம-7,30)

## நாவலர் பெருமானின் நினைவு வைபவம்

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலய நிர்வாகத்தின் ஏற்பாட்டில் சைவத்தின் காவலர் நல்லை நகர் நாவலர் பெருமானின் நினைவு வைபவம் அவரது குருபூசை நன்னாளான இன்று திங்கட்கிழமை (04.12.2023) காலை 10 மணி முதல் நல்லூரில் அமைந்துள்ள ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி ஆலயத் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறு. திருமுருகன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் துர்க்காபுரம் மகளிர் இல்ல மாணவிகளின் கூட்டுப் பிரார்த்தனை நிகழ்வு மற்றும் பேச்சு நடைபெறும்.

அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சி.சிவலிங்கராஜா "நாவலர் பெருமானால் காக்கப்பட்ட சுதேசிய சைவத்தமிழ்ப் பண்பாடு" எனும் தலைப்பில் சிறப்புரை ஆற்றுவார. அதனைத் தொடர்ந்து மகேஸ்வர பூசை (அன்னதானம்) இடம்பெறும். (ம-7)

## நீரில் மூழ்கிய மாணவன் பலி

நாரம்மல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மெட்டியகனே மஹாவெவ பிரதேசத்தில் நீராடச் சென்ற பாடசாலை மாணவன் ஒருவன் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் மாரவிட, தம்பதெனிய பிரதேசத்தைச் சேர்ந்தவர் என தெரியவந்துள்ளது.

நேற்று முன்தினம் காலை 3 பாடசாலை மாணவர்கள் மெட்டியகனே மஹாவெவவில் நீராடச் சென்ற வேளையில் அவர்களில் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயிருந்தார்.

பின்னர், மாணவர்களும் பிரதேசவாசிகளும் நீரில் மூழ்கிய மாணவனை மீட்டு தம்பதெனிய வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் ஏற்கனவே மாணவன் உயிரிழந்துள்ளதை வைத்தியர்கள் உறுதிப்படுத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நாரம்மல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-7)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை **செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை யாழ். பிரதேசத்தில்** இளவாலை வைத்தியசாலை, ஆலடி, இளவாலை, மெய்கண்டான், சேந்தான்குளம் இளவாலை, மாரீசன்கூடல், முல்லைவைரவர் கோவிலடி-பண்டத்தரிப்பு, பண்டத்தரிப்பு, பெரியவிளான், சென்ட் ஜூட்-இளவாலை, ஐஸ் தொழிற்சாலை-பொலிகண்டி, இலந்தைக்காடு, கணபதி ஆலை-கொற்றாவத்தை, கொற்றாவத்தை ,நாச்சிமார் கோவிலடி-பொலி கண்டி, நெடியகாடு, பொலிகண்டி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அரசன் அரிசி ஆலை, மகாறம்பைகுளம், ஹொரவப் பொத்தானை வீதி (6ஆவது மைல் போஸ்ட்) ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## மாணவர்களுக்கு விசேட அறிவிப்பு

அனைத்து மாணவர்களுக்கும் சீருடை மற்றும் பாடப்புத்தகங்கள் வழங்கும் பணியை 2024ம் ஆண்டு பாடசாலை ஆரம்பிக்கும் முன் நிறைவு செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மல்வத்து மகாநாயக்க தேரரை தரிசனம் செய்த பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அமைச்சர் இதனை குறிப்பிட்டுள்ளார். (ம-7)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு - 2023
16 Days of Activism against Gender Based Violence
(கார்த்திகை 25 முதல் மார்கழி 10 வரை)

JSAC

16
2023

"வன்முறைகளை "சகித்துக் கொள்" என்ற வார்த்தையும் வன்முறைதான். தொடர்ந்தும் சமூக அணிதிரட்டலோடு வன்முறைக்கு எதிராக போராடுவோம்! குரல் கொடுப்போம்! அது நம் ஒவ்வொருவரினதும் தார்மீக கடமையும் பொறுப்பும் ஆகும்!!!"

யாழ் சமூக செயற்பாட்டு மையம் | Jaffna Social Action Center (JSAC)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழலும் புதிய ஊழல் தடுப்புச் சட்டமும் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன?

06

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



தமக்கு தேவையானவர்களின் பிள்ளைகளை பாடசாலைகளில் சேர்ப்பதற்கு சில வலயக்கல்வி பணிப்பாளர்களும் அதிகாரிகளும் கூட இலஞ்சம் பெறுவதை மறுப்பதற்கில்லை. இவர்களின் சிபாரிசுகளுடன் வரும் மாணவர்களை சேர்க்கும் அழுத்தத்திற்கும் சில நேர்மையான அதிபர்கள் உட்படுகின்றனர். ஆகவே கல்வித்துறை இலஞ்சம் மற்றும் ஊழல் என்பது பாடசாலைகளில் மட்டும் தங்கியிருக்கும் விடயமல்ல என்பதை பலரும் உணர்ந்து கொள்ளல் அவசியம்.

### அனைத்து மக்கட்கும் சமத்துவ உரிமை

இலங்கையின் உள்நாட்டு சட்டப் பொறிமுறை என நோக்கும் போது முதலிடம் பெறுவது அரசியல் அமைப்பே ஆகும். அதன் உறுப்புரை 12 ஆனது அனைத்து மக்கட்கும் ஆன சமத்துவ உரிமையை வலியுறுத்துகின்றது. இலஞ்ச செயற்பாடுகள் காரணமாக தகுதியாக ஒருவர் தனக்காக வாய்ப்பை இழக்கும் போது அவர் இவ்வுறுப்புரையின் கீழ் தனக்கான நிவாரணத்தை உயர்நீதிமன்றத்திடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இவ்வுறுப்புரை அரச செயற்பாடுகட்கு மட்டுமே ஏற்புடையது தனியார் சமத்துவ மீறல்கட்கு அவ்வுறுப்புரை பாதுகாப்பை வழங்கவில்லை. மேலும் உறுப்புரை 28(1) ஆன்து இலங்கையின் பொதுச் சொத்துக்களை பாதுகாத்தலும் அவை துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்படும் போது அதற்கெதிராகச் செயற்படுதல் இலங்கை குடிமக்கள் அனைவரினதும் தார்மீக பொறுப்பு என்பதையும் வலியுறுத்துகின்றது.

### ஊழல் மற்றும் மோசடிகளை ஒழிப்பதே மக்களின் எதிர்பார்ப்பாகும்

சில மாதங்களுக்கு முன் ஊழல் மற்றும் மோசடிகள் சம்பந்தமாக ஜனாதிபதி அலுவலகத்தினால் செய்தி ஒன்று வெளியிடப்பட்டிருந்தது அது கீழே தரப்படுகிறது.

முழு நாட்டினதும் எதிர்பார்ப்பாக காணப்படும் ஊழல் ஒழிப்புச் சட்டத்தை எதிர்ப்போரை மக்கள் புறக்கணிப்பர் என இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் முன்னாள் பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெனரல் சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

அரசாங்க துறைக்குள் இலஞ்சம் மற்றும் ஊழல் மோசடிகளை தவிர்ப்பதற்காக ஜனாதிபதியின் வழிகாட்டலின் கீழ் பல்வேறு மூலோபாய திட்டங்கள் வகுக்கப்பட்டு வருவதாகவும் புதிய சட்டத்தின் கீழ் அந்த செயற்பாடுகள் சரியான முறையில் முன்னெடுக்கப்படும் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்படும் '101' கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலஞ்சம் மற்றும் ஊழல் எதிர்ப்புச் செயற்பாடுகளை போராட்ட வடிவங்களாக மாற்றிக்கொள்ளாது அவற்றை ஒழித்துக்கட்டுவதற்கான விடயமாகவே ஊழல் ஒழிப்புக்கான புதிய சட்டம் கொண்டு வரப்படவிருப்பதாகவும் அதனால் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பணிகள் முழுமையாக சுயாதீன தன்மை கொண்டதாக மாறும் எனவும் சரத் ஜயமான்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் கருத்து தெரிவித்த அவர்,

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் காரணமாக இலங்கை மாத்திரமின்றி முழு உலகமும் நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ளது. எந்தவொரு நாட்டினதும் ஊழல் செயற்பாடுகள் அந்த நாட்டின் பொருளாதாரத்தை பெருமளவில் பாதிக்கும். அதனால் தமது நாடு அபிவிருத்தி அடைய வேண்டும் என்ற எண்ணம் கொண்ட தலைவர்களும் மக்களும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை மட்டுப்படுத்தி கொள்ளவே எதிர்பார்ப்பர்.

அதற்காகவே 2004 ஆம் ஆண்டில் உலக நாடுகள் இணைந்து ஊழலுக்கு எதிரான கொள்கைகளை உருவாக்கின. தமது நாடு ஊழல் அற்ற நாடு என்ற பெருமிதத்தை பெற்றுக்கொள்ள விரும்பும் எந்தவொரு நாடும் அந்த கொள்கையை பின்பற்றலாம். நமது நாடும் அந்த கொள்கைத் திட்டத்தில் 2004 ஆம் ஆண்டிலேயே கையொப்பம் இட்டிருந்தாலும் தற்போது வரையில் உள்நுழையாமல் இருப்பது வருத்தத்திற்குரியதாகும். அதனாலேயே எமது நாட்டின் அரச மற்றும் தனியார் துறைகளில் மோசடி செயற்பாடுகள் நிறைந்து காணப்படுவதாக மக்கள் நினைக்கின்றனர்.

இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை முற்றாக ஒழித்த நாடுகள் அதனை எவ்வாறு சாத்தியப்படுத்திக்கொண்டன என்பதை பற்றி நாம் அறிந்துகொள்ள வேண்டும். சிங்கப்பூர், ஹொங்கொங், பூட்டான், இந்தோனேசியா, மலேசியா உள்ளிட்ட ஆசிய நாடுகளை போன்றே ஸ்கெண்டினேவய நாடுகளும் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகளை ஒழித்த நாடுகள் வரிசையில் முன்னணியில் நிற்கின்றன. அந்த நாடுகளின் மக்கள் மத்தியில் மேற்படி செயற்பாடுகளை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கம் வேரூன்றிக் காணப்படுகின்ற போதிலும் நமது நாட்டவர் மத்தியில் அவ்வாறான எண்ணங்கள் இல்லை. அதனால் கல்வித்துறையில் முழுமையான மறுசீரமைப்பை மேற்கொள்ளும் அதேநேரம் சட்டத்தையும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

எமது நாட்டின் மிக முக்கியமான ஒரு அத்தியாயத்தையே நாம் இப்போது கடந்து செல்கிறோம். புதிய சட்டம் கொண்டுவரப்படும் பட்சத்தில் எமது அபிமானம் மேலோங்கும். இருப்பினும் சட்டம் கொண்டுவரப்படுவதால் மாத்திரம் இலஞ்சம் மற்றும் ஊழல் செயற்பாடுகள் முற்றாக ஒழிந்துவிடாது.

1954 கொண்டுவரப்பட்ட ஊழல் ஒழிப்புச் சட்டமூலத்தில் திருத்தம் செய்யப்பட்டு 1994 ஆம் ஆண்டில் இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழு ஸ்தாபிக்கப்பட்டது. அன்று முதல் 30 வருட காலப்பகுதியில் எவ்வித மாற்றங்களும் செய்யப்படவில்லை. ஐக்கிய நாடுகள் சபையுடன் நாம் இணைந்துகொண்டு 20 வருடங்கள் பூர்த்தியாகிவிட்டன.

இதன் முக்கியமான விடயமாக இலஞ்சம் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவின் பிரதானிகள் வார்த்தைக்கு அப்பால் சென்று சுயாதீனமாக செயற்பட வேண்டியது அவசியமாகும். சுயமாக தீர்மானம் மேற்கொண்டு சுயாதீனமாக செயற்படுவதற்குமான சூழல் அவர்களுக்கு உருவாக்கிக்கொடுக்கப்பட வேண்டும்.

1954 ஆம் ஆண்டு முதல் தற்போது வரை எமது நாட்டில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவின் பணியானது கல்விப் பொதுத் தராதர பரீட்சையில் சித்தியடைந்த பொலிஸ் உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால், லஞ்சம், ஊழல் போன்ற சிக்கலான குற்றங்களைச் வெளிப்படையாக கண்டறியக்கூய ஆற்றல் நுண்ணறிவு, கணிதம், பொறியியல், தடயவியல் தணிக்கை, கணக்குப் பதிவியல் போன்ற விடயப்பரப்புக்களில் நிபுணத்துவம் பெற்றவர்களிடத்திலேயே காணப்படுகின்றது. ஒரு சம்பவத்தின் மூல காரணத்தை மிகக் குறுகிய காலத்தில் அவர்களால் கண்டுபிடிக்க முடியும். இந்த பணியை செய்ய பொலிஸ் அதிகாரிகளுக்கு பல மாதங்கள் அவசியப்படும்.

ஹொங்கொங், பூட்டான் போன்ற நாடுகளில் இந்த விசாரணைகள் பொலிஸ் அதிகாரிகளால் நடத்தப்படுவதில்லை. பொறியியலாளர்கள், பட்டய கணக்காளர்கள் உள்ளிட்டவர்களினாலேயே நடத்தப்படுகிறது. இதற்காக நமது நாட்டில் அதிகாரிகள் ஆட்சேர்ப்பின் போது சிவில் சேவைக்கான ஆட்சேர்ப்பு முறையை பின்பற்றியே மேற்படி அதிகாரிகளும் நியமிக்கப்படுகின்றனர்.

இந்த புதிய சட்டத்தினூடாக, ஆணைக்குழுவிற்கு அவசியமான நிபுணர்களை புலனாய்வாளர்களாக நியமிக்க அதிகாரம் உள்ளது. அவர்களின் சேவை திருப்தி அற்றதாக காணப்படும் பட்சத்தில் ஒப்பந்த காலம் நீடிக்கப்படுவதை தவிர்க்கலாம். இதன்படி, திறமையான புனாய்வாளர்களை ஆட்சேர்ப்பு செய்ய மேற்படிச் சட்டத்தின் ஊடாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழுவுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மேலும் அவர்களுக்குத் தேவையான பணத்தைப் பெறுவதற்கு நிதி அமைச்சுக்கோ அல்லது திறைசேரிக்கோ செல்ல வேண்டிய அவசியமில்லை. அதற்கான பணம் பாராளுமன்றத்தின் மூலம் திறைசேரியில் இருந்து வழங்கப்படும். இந்தச் சட்டத்தினால் கடமை மோதல், தனியார் துறை, லஞ்சம் மற்றும் ஊழலைத் தடுப்பது போன்ற சிறப்புப் பகுதிகளுக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல் வரலாற்றில் முதன் முறையாக அரசாங்க நிறைவேற்று அதிகாரிகளின் சொத்து விவரங்கள் இலத்திரனியல் முறைமையின் ஊடாக இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவினால் பெற்றுக் கொள்ளப்படவுள்ளது. அதேபோல் கடந்த காலங்களில் இடம்பெற்ற குற்றங்கள் தொடர்பிலான விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கும் பட்சத்தில் அவற்றை பழைமையான சட்ட முறையின் கீழ் விசாரணை செய்து தண்டனையை பெற்றுக் கொடுக்கவும் இடமளிக்கப்பட்டுள்ளது.

எதிர்காலத்திலும் தாக்கம் செலுத்தும் வகையில் சட்டங்களை தயாரிக்க முடியாது. இதன் ஆணையாளர்களை அரசியலமைப்புச் சபையே தெரிவு செய்ய வேண்டும். இது வரைகாலமும் ஜனாதிபதியின் தனி தீர்மானத்தின் கீழ் ஆணைக் குழுவின் தலைவர்கள் தெரிவு செய்யப்பட்ட நிலையில் இனிவரும் நாட்களில் சபையினால் பரிந்துரைக்கப்பட்ட ஆணையாளர் தொடர்பில் சபையுடன் ஆலோசித்த பின்பே ஜனாதிபதி தெரிவு செய்வார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## டெங்கு...

கம்பஹா, வத்தளை, களனி மற்றும் நீர்கொழும்பு ஆகிய பகுதிகளில் அதிகளவான டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக அந்தப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

அத்துடன், இன்று முதல் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களில் விசேட டெங்கு ஒழிப்பு வேலைத்திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

## பெருமளவான...

துப்பரவு செய்து, கிணற்றினை இறைத்த போது, கிணற்றினுள் இருந்து பெருமளவான இராணுவ அங்கிகள் மீட்கப்பட்டுள்ளன.

அது தொடர்பில் இராணுவத்தினருக்கு அறிவித்ததை அடுத்து இராணுவத்தினர், தாம் அதனை அப்புறப்படுத்துவதாக கூறியுள்ளனர்.

அதனால் அவரது காணிக்குள் இராணுவ அங்கிகள் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளன.

இவை யுத்தத்தில் ஈடுபடும் இராணுவத்தினர், தமது உயிரைப் பாதுகாத்துக் கொள்வதற்காக அணிந்து கொள்ளும் ஒருவகை கவச அங்கி என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,33)

## மீசாலையில்...

பிள்ளை நடுவதற்காக கிடங்கு வெட்டியபோதே மேற்படி கைக்குண்டு அடையாளம் காணப்பட்டுள்ளது.

இது தொடர்பாக காணி உரிமையாளரால் சாவகச்சேரிப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் கைக்குண்டினை மீட்பதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7,30)

## பயங்கரவாத...

தாக அமெரிக்க பிரதிநிதிகள் சபையின் உறுப்பினர் பில் ஜோன்சன் தெரிவித்துள்ளார்.

அனைத்து மக்களினதும் சிவில் மனித உரிமைகளை நிலைநாட்டுமாறு நான் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கின்றேன் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கையின் வடக்கு - கிழக்கில் தங்களுடைய அமைதியான நினைவுகூரல்களின் போது தமிழர்கள் கைது செய்யப்பட்டமை குறித்து ஆழ்ந்த கரிசனை கொண்டுள்ளதாக அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ராஜா கிருஸ்ணமூர்த்தி தெரிவித்துள்ளார்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்ட இந்த கைதுகள் தமிழர்களின் நினைவுகூரல்களை தடுக்க முயலும் இலங்கை பொலிஸாரின் வரலாற்றின் தொடர்ச்சியே என அவர் தெரிவித்துள்ளார். (ம-7)

## காசாவில்...

தெரிவித்துள்ளது.

இஸ்ரேலிய போர் விமானங்கள் அகதிகள் முகாம்கள், மக்களின் குடியிருப்புப் பகுதிகளில் தொடர்ச்சியாக மேற்கொள்ளும் தாக்குதலில் பெருமளவானோர் கொல்லப்பட்டனர்.

அத்துடன் இராணுவத்தினர் தாங்கிகள் மற்றும் ஆட்லறிகள் மூலமும் தாக்குதல்களை மேற்கொண்டு வருகின்றனர். இஸ்ரேலிய தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் சடலங்கள் மற்றும் காயமடைந்தவர்கள் உட்பட 300 க்கும் மேற்பட்ட பாலஸ்தீனர்கள் ஷெஜாயா பகுதியில் இடிந்து விழுந்த கட்டடங்களில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாக சிவில் பாதுகாப்பு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

ஒக்டோபர் 7 முதல், 6,500 சிறுவர்கள் மற்றும் 4,000க்கும் மேற்பட்ட பெண்கள் உட்பட,16,000 பாலஸ்தீனியர் கள் கொல்லப்பட்டதுடன், மேலும் 40,652 பேர் காயமடைந்துள்ளனர் என்று காசாவில் உள்ள பாலஸ்தீனிய சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது. (ம-7)

## தமிழ் அரசுக்...

பெறவுள்ளது. இதன்போது புதிய தலைவர் தெரிவு இடம்பெறும்.

ஜனவரி 20ஆம் திகதி மத்திய செயற்குழு கூடி புதிய தலைவரை தெரிவு செய்வதென்றும், அன்று, ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் போட்டியிட்டு, தலைவரை ஏகமனதாக தெரிவு செய்ய முடியாமல் போனால், 21ஆம் திகதி பொதுக்குழு கூட்டத்தில் தலைவரை தெரிவு செய்வதென்றும், 28ஆம் திகதி புதிய தலைவர் உரையாற்றுவார் என்றும் கட்சியின் மத்தியகுழு கூட்டத்தில், கடந்த நவம்பர் 5ஆம் திகதி வவுனி

கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், கட்சியின் தலைமைப் பதவிக்கு போட்டியிடுவோர்கள் என எதிர்பார்க்கப்பட்ட சி.சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன் ஆகிய இருவரும் வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளனர். மேலும் யோகேஸ்வரன் எம்.பியும் வேட்புமனுத் தாக்கல் செய்யவுள்ளார்.

கட்சியின் செயலாளரிடம் இருவரும் தமது வேட்புமனுக்களை சமர்ப்பித்துள்ளனர்.

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் வரலாற்றில் தலைமைப் பதவிக்கு வாக்கெடுப்பு நடத்தப்பட்ட வரலாறில்லை. இதுவரை ஏகமனதாகவே தலைவர் தெரிவு செய்யப்பட்டு வந்தார். ஒன்றுக்கு மேற்பட்ட போட்டியாளர்கள் களத்திலிருந்தால், பொருத்தமான ஒருவருக்கு விட்டுக்கொடுத்து ஏனையவர்கள் ஒதுங்கிக் கொள்வது அரசியல் பாரம்பரியத்தை தமிழ் அரசுக் கட்சி பேணி வந்தது. எனினும், அந்த வழக்கம் இம்முறை இல்லாமல் போவதற்கான வாய்ப்புக்களே உள்ளன. (ம-7)

## மிக்...

தமிழகத்தை நோக்கி நகர்ந்து பின்னர் வடக்கு நோக்கி நகர்ந்து டிசம்பர் 05ஆம் தேதி தெற்கு ஆந்திரா கடற்கரையில் இருந்து இந்தியாவுக்குள் நுழையும் என்று அந்த அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தென்மேற்கு வங்கக் கடலில் நிலைகொண்டுள்ள மிக்ஜாம் சூறாவளி நேற்று முற்பகல் 11.30 மணியளவில் யாழ்ப்பாணத்திலிருந்து 320 கிலோமீற்றர் தொலைவில் நிலைகொண்டிருந்ததாக வளிமண்டலவியல் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன், நேற்றுக் காலை வெளியிடப்பட்ட சிவப்பு அறிவித்தல் மூலம் எதிர்வரும் 48 மணித்தியாலங்களுக்குள் மன்னார், காங்கேசன்துறை, திருகோணமலை, மட்டக்களப்பு, பொத்துவில் வரையான கடற்பரப்புகளில் மீன்பிடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதை தவிர்க்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 36 மணித்தியாலங்களுக்கு

மற்றும் வடமத்திய மாகாணங்களிலும் திருகோணமலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. (ம-7)

## இரு வாரங்...

யன் அமெரிக்க டொலர்களும் இம் மாதத்தில் இலங்கைக்கு கிடைக்கப் பெறவுள்ளதாக நிதி அமைச்சு தெரிவித்தது.

கடன் மீள் செலுத்தலுக்கான நிவாரண காலத்தை இலங்கைக்கு வழங்கியுள்ள சர்வதேச மற்றும் தனியார் கடன் வழங்குநர்கள் கடனுக்கான வட்டி தொகையில் குறிப்பிட்ட தொகையை தள்ளுபடி செய்வதற்கும் இணக்கம் தெரிவித்துள்ளதாகவும் நிதி அமைச்சு மேலும் குறிப்பிட்டது. (ம-7)

லக்கி 7 VIP
திகதி 2023.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 143
E 9 5 7 1 2 1 E

தன நிதானய
திகதி - 2023.12.03
சீட்டிழுப்பு இலக்கம் - 1347
J 05 44 70 71 J
31360

மெகா பவர்
திகதி 03/12/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1665
J 24 27 38 40 53
23776

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.03
சீட்டிழுப்பு இலக்கம் 0626
கடகம் 07 12 26 51 கடகம்
50069 16

மஹஜன சம்பத
திகதி 2023/12/03
சீட்டிழுப்பு இலக்கம் 5317
X 0 3 6 6 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3559
சீட்டிழுப்பு திகதி 03.12.2023
D 02 05 25 46
D 10312

சுப்பர் தன சம்பத
உத்தியோகபூர்வ முடிவுகள்
திகதி 03.12.2023 வெற்றி வாரம் 025
E 7 3 0 0 0 3
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 22,917,399.20
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2291 வர்ணம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.12.03 தினம் ஞாயிற்றுக்கிழமை
22 27 33 44 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,466,612/-

சனிதா
திகதி 2023.12.03 வெற்றி வாரம் 4452
09 16 41 70 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,711,964.00

சசிரி
வெற்றி வாரம் 410
சீட்டிழுப்பு திகதி 2023.12.03
கபிலம்
02 21 37
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,868,960/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4003 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2023.12.03 தினம் ஞாயிற்றுக்கிழமை
மீனம்
03 13 19 60
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,421,904/-

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
I 15 13 15 23 46
1467 மஞ்சள் 2023.12.03 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 472,727,994.20

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2117
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.73,452,120/-
28 61 63 69 C

## வட்டுக்கோ...

இதன் போது வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு செல்லும் வீதியில் பொலிஸார் குவிக்கப்பட்டு வீதித் தடைகள் அமைக்கப்பட்டிருந்தது.

தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் வட்டுக்கோட்டைச் சந்தியில் நேற்று பிற்பகல் 3 மணியளவில் உயிரிழந்த இளைஞனுக்கு அஞ்சலி செலுத்தி போராட்டம் ஆரம்பமானது.

நாகராசா அலெக்ஸின் மரணத்துக்கு நீதி கோரியும், வட்டுக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் தொடர்ச்சியாக அரங்கேற்றப்பட்டுவரும் சட்ட விரோத சித்திரவதைகளை நிறுத்தக் கோரியும் இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் கலந்துகொண்டவர்கள், "வட்டுக்கோட்டைப் பொலிஸாரின் அராஜகத்துக்கு முடிவு கட்டு!", "அப்பாவிகளைத் தண்டிக்காதே! குற்றவாளிகளைத் தப்பவிடாதே!!", "வேலியே பயிரை மேய்கின்றதா?", "எமது மக்களின் பாதுகாப்பை உறுதி செய்!", "தடுப்புக்காவல் படுகொலைகளை நிறுத்து!" போன்ற பதாகைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பினார்கள். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச்செயலாளர் செல்வராசா கஜேந்திரன், ஊடகப் பேச்சாளர் கனகரத்தினம் சுகாஷ், படுகொலை செய்யப்பட்ட அலெக்ஸின் உறவினர்கள் மற்றும் பொது மக்கள் எனப் பலரும் இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டார்கள்.

போராட்டம் நிறைவுபெறும் தருவாயில் காங்கேசன்துறை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் தலைமையிலான பொலிஸார் கலந்துரையாட முன்வந்தபோதும் போராட்டக்காரர்கள் கலைந்து சென்றனர்.

(ம-7.33)


**IELTS - New Batch ஆரம்பம்**
இத்துடன் Basic & Advance Grammar Classes
இல.53, சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
077 798 9830 By:-B.MURALI
வெளிநாட்டு பல்கலைக்கழகங்களுக்கான Student Visa மற்றும் Work Visa ஒழுங்கு செய்து கொடுக்கப்படும். (18097)

**சேல்ஸ் வாகனம் வாடகைக்கு**
டாட்டா சுப்பர் ஏ.சி
077 925 4050 (18083)

**காணி விற்பனைக்கு**
A9 வீதியில் நெடுங்குளம் சந்தியில் இருந்து கொழும்புத்துறை செல்லும் வீதியில் தண்டவாளத்திற்கு மேற்கே செல்லும் பாதையில் கோயிலுக்கு முன்பாக உள்ள 3 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு (C-7789)
077 948 4582

**CANADA VISITOR VISA**
VISITOR VISA வில் கனடா செல்வதற்குரிய ஆலோசனைகள் மற்றும் Online விண்ணப்பங்கள் விரைவாக செய்து தரப்படும்
CIMS COLLEGE (C-7797)
0777-068-777
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்
V2 TRAVELS

**உடனடி வேலை வாய்ப்பு**
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-7797)
V2 TRAVELS
எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம் • சாவகச்சேரி • மானிப்பாய் • நெல்லியடி • பருத்தித்துறை • திருகோணமலை • வல்வெட்டித்துறை • கோப்பாய் • புத்தூர் • பண்டத்தரிப்பு • சங்கானை • கொழும்பு
வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்
**ஆகாஸ் நகை மாடம்**
யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்
வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (18088)
076 825 7716 (ஆகாஸ்)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

**IELTS** Academic General UKVI
#Student VISA மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
# Unique Test Tips
# 40 hrs with free 4 mock exam
# Latest course Material (Book 18)
DMI COMPUTER EDUCATION 0777 17 35 17
A1 IELTS Life Skills திருமணம் செய்து UK செல்வோருக்கானது
B1 Skilled Worker Visa மூலம் வெளிநாடு செல்வோருக்கானது
DMI , British Council இன் அங்கீகரிக்கப்பட்ட பரீட்சை பதிவு மையமாகும்
யாழில் ஆங்கிலக்கல்விக்கு No.1 பயிற்சி மையம்
DIPLOMA IN ENGLISH
SPOKEN ENGLISH
புதிய பிரிவு ஆரம்பம் 6/12/2023-WED 9/12/2023-SAT 9 am or 3 pm
German - Germany ,Swiss நாட்டுக்கு செல்வோருக்கு Deuctsch
French - France நாட்டுக்கு செல்வோருக்கு (C-7796)
DMI COMPUTER EDUCATION
யாழ்ப்பாணம் No.113, கஸ்தூரியார் வீதி 0777 24 07 07 021 222 4403

| நெல்லியடி | சாவகச்சேரி | சுன்னாகம் | சிறுவிச்சந்தி சண்டிலிப்பாய் | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| 021 226 2470 | 021 227 0775 | 021 224 1970 | 021 225 6665 | 021 228 5655 |
| 0777577333 | 0777227074 | 0776032300 | 0761354503 | 0776398096 |

**S.D Electric Work - கிளிநொச்சி**
வீட்டு வயரிங் தொழிற்சாலைக்குரிய three phase வயரிங் panal bord வேலைகள் மற்றும் வீட்டிற்குரிய பைப் லைன் bathroom pitting வேலைகள் சிறந்த முறையில் பொறியியலாளர்களால் முறைப்படி செய்து தரப்படும்.
கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், வவுனியா போன்ற இடங்களிலும் எமது சேவை கிடைக்கும். (18042)
076 085 8111

**பொருளியல் கருத்தரங்கு**
A/L - 2023
வளவாளர் - S.JEYAKUMAR
(B.A (Hons) Econ SPl, M.A in Econ, P.G.D.E)
- பரீட்சை எதிர்பார்ப்பு வினாவிடைகள்.
- புள்ளித்திட்ட விளக்கம்
- தேர்ச்சி அடிப்படையிலான மீட்டல்
- கையேடுகள் வழங்கப்படும்
(18062)
ஆரம்பம் : 05.12.2023 செவ்வாய் பிற்பகல் 2.00 மணி
இடம் : New Science Hall, Jaffna.
வெளிமாணவர்களும் கலந்து கொள்ளமுடியும்.
Zoom செயலி மூலமும் நடைபெறும்.
தொடர்புகளுக்கு
077 723 8597, 076 535 0999, 077 011 9434

**AutoCAD**
AutoCAD MEP
CLASSES
Specially For:-
- Maths Students
- Other Students
- Engineers
- Quantity Surveyors
- Technical Officers
- Draughtsmen
- Graphic Designers
2D, 3D & Modeling
Online or Physical Classes @ Jaffna
Contact :
V.V.MOORTHY
( AutoCAD Lecturer )
0777-451 625
0777-469 282 (WhatsApp)
(C-7795)

**வேலையாள் தேவை**
கிளிநொச்சியிலுள்ள மாட்டுப் பண்ணைக்கு நன்கு அனுபவமுள்ள வேலையாள் தேவை.
சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.
சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். (18080)
077 538 1642

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**



எமது கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும் தற்போது யா/உசன் இராமநாதன் மகா வித்தியாலய ஆசிரியருமான
திரு. சண்முகம் கருணாகரன்
[ B.A (Hons) Eco.sp, M.A, PGDE ]
அவர்கள் 16.11.2023 முதல் இலங்கை அதிபர் சேவை தரம் III இல் நியமனம் பெற்றமையை முன்னிட்டு பாராட்டுவதோடு மேலும் பல பதவி உயர்வுகளைப் பெறவும் வாழ்த்துகின்றோம்.
Best Wishes
வாழ்த்துவோர்- (18094)
பாடசாலைச் சமூகம்
யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி

**காணி விற்பனைக்கு**
நல்லூர் கோவிலில் இருந்து 2Km தூரத்தில் 04 பரப்பு காணி விற்பனைக்குண்டு.
நிலப்பரப்பு
- பிரதான இராச பாதையும் G.P.S விளையாட்டரங்க வீதியும் இணையும் பிரதான சந்தி முகப்புடன் உள்ளது.
- 18 அடி பாதையுடன்.
- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் இரண்டு துண்டுகள் உள்ளது.
- திருமண மண்டபங்கள், அனைத்து விதமான வியாபார நிலையங்கள், வீடுகள் கட்டுவதற்கு உகந்த இடம்.
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி.
- நன்னீர் ஊற்று.
பார்வையிடும் நேரம் : காலை 6 மணி முதல் மாலை 6 மணி வரை
தொடர்புகளுக்கு : ஜெயம் (18093)
077 814 7389, 077 986 5457


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.101, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.12.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org